Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

குடும்பத் தலைவிகளுக்கு ஓர் நற்செய்தி

ஊறுகாய் வகைகள், அனைத்து தானிய மா வகைகள், அயடீன் கலந்த உப்பு, ரசப் பவுடர், திடீர் தோசைமா, அப்பக்கலவை, பேக்கிங்பவுடர் இன்னும் பல நீங்கள் பெற்றிட

M.G.M உற்பத்திப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான

முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ்

777 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். Phone : 222 7894

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 10 (25.10.2004) திங்கட்கிழமை இதழ்: 25

### பேச்சுக்களை மீள ஆரம்பிக்குமாறு

# சர்வதேச சமூகத்தின் அழுத்தம் அடுத்த மாதம் அதிகரிக்கும்!

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சியில் - அனுசரணையாளரான நோர்வே மற்றும் இலங்கைக்கு பெருமளவு நிதியுதவியை வழங்கும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஈடுபட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷி, எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார். இவ்வாறு வரும் இவர் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தையும் கோருவாரென ஆசிய இராஜதந்திர வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இலங்கை அரசாங்க அதிகாரிகளின் தகவல்களின்படி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை யடுத்து அமெரிக்க இராஜாங்கப் பிரதிச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜும் கொழும்பு வரவுள்ளார்.

அடுத்த மாதம் இடம்பெறவுள்ள சர்வதேச இராஜதந்திரிகளின் கொழும்பு விஜயம் - தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் ஒரு முயற்சியே எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டதற்கு இடைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க பசுபிக் படைத்தளபதி

# குடாநாட்டு நிலைமையை நேரில் பார்வையிட்டார்!

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளை ஆராய – ஒருவார காலம் அங்கு தங்கியிருந்த அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்தின் திட்டமிடல் இயக்குநர் மேஜர் ஜெனரல் கார்ல் எயிக்கன்பெரி யாழ்.குடாநாட்டுக்கும் விஜயம் செய்து அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை நேரில் மதிப்பீடு செய்ததாகத் தெரியவருகிறது.





மேஜர் ஜெனரல் எயிக்கன்பேரி மற்றும் லெப்.கேணல் றிச்சட் எர்வன் மேஜர் வைற் பற்றிக், கப்டன் மக்மென் மக் கெற் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்தனர்.

பலாலி விமானப் படைத்தளத்தை வந்தடைந்த இவர்களுக்கு பலாலி படைத் தலைமையகத்தில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலைத் துறைமுகச் சூழலில் புலிகள் முகாம்களை அமைக்கவில்லை!

### அரசாங்கத்தின் குற்றச்சாட்டை கண்காணிப்புக்குழு நிராகரிப்பு!

(கொழும்பு)

**திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் எந்தவிதமான பாதுகாப்பு அரண்களையும் அமைக்கவில்லை என்றும் –**

**துறைமுகத்தைச் சூழ புலிகளால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் இதனால் துறைமுகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் அரசாங்கத்தரப்பால் செய்யப்பட்ட முறைப்பாடு முற்றிலும் தவறானதென்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசாங்கத்துக்கு கடந்த வாரம் அனுப்பியிருந்த கடிதத்தில் கூறியிருந்தது.**

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளரான ஒஸ்கார் சோல்னஸ் தெரிவித்ததாவது -

திருகோணமலை துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதியில் விடுதலைப் புலிகள் புதிய காவலரண்களை அமைத்துள்ளனரா என்பதை ஆராய்வதற்காக நாம் சென்றபோது அவ்வாறான காவலரண்கள் எதையும் நாம் காணவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பாதுகாப்புக்கு சேது சமுத்திரத் திட்டம் ஆபத்து!

### கடற்படைத் தளபதி தயா சந்தகிரி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்புக்கு சேது சமுத்திரத்திட்டம் அச்சுறுத்லை ஏற்படுத்தும் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து வெளிவிவகார அமைச்சருக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சேது சமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வர்த்தக ரீதியாக இலங்கைக்கு வரும் கப்பல்களின் வருகை பாதிக்கப்படும். அத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளை சர்வதேச சமூகத்துக்கு விளக்கினோம்!

### பி.பி.சி பேட்டியில் தமிழ்ச்செல்வன்



(லண்டன்)

தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளையும் - தற்போது சமாதான முயற்சி தேக்கமடைந்திருக்கும் சூழல் குறித்தும் மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்துள்ள மக்கள் விரக்தியடைந்து வருவது குறித்தும் சர்வதேச சமூகத்தினருக்கு எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற - மிகவும் பயனுள்ள பயணமாக எமது ஐரோப்பா விஜயம் அமைந்தது என்று

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று நாடுதிரும்புவதற்கு முன்னர் சூரிச்சில் வைத்து பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பி.பி.சி பேட்டியில் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவிக்கையில் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளை, தற்பொழுது அமைதிச் சூழ்நிலையில் எமது மக்கள் மனிதாபிமான நெருக்கடிகளைச் சந்தித்து அவர்கள் விரக்தி நிலையை அடைந்து வரும் நிலையையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறியிருக்கிறோம்.

முக்கியமாக சாவதேச ரீதியில் பரப்பிவரும் செய்திகளுக்கு எங்கள் தலைமைப் பீடத்தின் நிலைப்பாடுகளை நேரடியாக விளக்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

உண்மைகளை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம் ஏனெனில் மாற்றுக் குழுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் ஐரோப்பாவுக்கு பயணமானார்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரோன் புருவ் ஹொவ்டே ஐரோப்பாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இதனால் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவராக ஹக்ரப் ஹொக்லன்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு வருகை தந்துள்ள சிறப்புக் கண்காணிப்பாளர் வோல்லிங்கின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இடி தாக்கியதில் சிப்பாய் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் பகுதியிலுள்ள 554 ஆவது பிரிகேட் முகாமில் கடமையிலிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் இடி தாக்கியதில் உயிரிழந்ததாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பகல் 1.40 மணியளவில் இடம்பெற்றதாகவும் -

உயிரிழந்தவர் வல்பிட்ட அக்குறச பகுதியைச் சேர்ந்த கே.எம். சுகதபால என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த சிப்பாயின் சடலம் கொழும்பிற்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை இராணுவப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் படைத்தலைமையகம் மேலும் தெரிவித்தது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# சிரித்திரன் அறிமுகவிழாவின்போது











## சிறப்புற நடைபெற்ற சிரித்திரன் அறிமுகவிழா

தமிழர் தாயகத்தின் முன்னோடி நகைச்சுவை ஏடு சிரித்திரன் மீள்வரவு அறிமுக நிகழ்வு நேற்று யாழ். பல நோ. கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை ஓவியர் றமணி ஏற்றி வைத்தார். சிரித்திரன் ஆசிரியர் சுந்தரின் திருவுருவப்படத்திற்கு மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமாகிய வரதர் மலர்மாலை அணிவித்தார்.

இந்தநிகழ்வைத் தொடர்ந்து சிறப்புரைகளை யாழ்.மாநகரசபை ஆணையாளர் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், பொன். கணேசமூர்த்தி, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

சிரித்திரன் மீள்வரவுப் பிரதியை பொன். கணேசமூர்த்தி அறிமுகம் செய்து வைக்க அண்ணா கோப்பி நிறுவன உரிமையாளர் பொ. நடராசா பெற்றுக் கொண்டார்.

### தண்டப்பணம் விதிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியிலுள்ள பலசரக்குக் கடைகளில் கடந்த 18ம் திகதி அச்சுவேலி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் நடாத்தப்பட்ட சோதனையில் பெருமளவிலான காலாவதியான பிஸ்கட், பால்மா வகை, நெல்லிரசம் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக நான்கு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக கடந்த 20 ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தலா மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (80)

### தென்மராட்சியில் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ள நூலக வாரத்தை முன்னிட்டு தென்மராட்சிக் கல்வி வலயமும், ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் நிறுவனமும் இணைந்து எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளது.

இதில் - அனைத்து ஆசிரியர்கள், மாணவர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (29)

## கிளிநொச்சி விபத்தில் இளம் பெண் காயம்!

கிளிநொச்சியில் - கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்ற விபத்தொன்றில் இளம் பெண்ணொருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குமாரபுரம் - பரந்தனைச் சேர்ந்த சபாரத்தினம் மைதிலி (வயது 22) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார்.

கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் - ஏ-9 வீதியால் சென்று கொண்டிருந்த இந்தப் பெண்ணை கன்ரர் வாகனம் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்த இந்தப் பெண் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

### சந்திக்குமாறு கோரிக்கை

வடமாகாணத்தில் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட மரண விபத்துக்களிலும் , மின்னூட்டலினாலும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

2002, 2003, 2004 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மேற்குறிப்பிட்ட விபத்துக்களில் இறந்தவவர்களின் குடும்பத்தினருக்கு உதவி செய்யும் முகமாக குடும்ப அங்கத்தவர்கள், மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளரை அடுத்த மாதம் 3 ஆம் திகதி அலுவலகத்திற் சந்தித்து அதற்குரிய படிவங்களில் கேட்கப்பட்ட தகவல்களை பூர்த்தி செய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சிறுமிக்கு கல்லெறிந்தமைக்காக நால்வருக்கு விளக்க மறியல்!

வரணிப்பகுதியில் 8 வயது சிறுமி மீது கல்லெறிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பெண்கள் உட்பட 6 பேரைச் சாவகசேரி நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸார் ஆஜர் செய்தனர். இவர்களில் இரண்டு பெண்களையும் பிணையிற் செல்ல அனுமதித்த நீதிவான் ஆண்கள் நால்வரையும் நவம்பர் 1 ஆம் திகதிவரை விளககமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச்சம்பவம் வரணிப் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (29)

## பொன்னாலையில் மாடுகளால் நெற்பயிர்கள் நாசம்

(பொன்னாலை)

பொன்னாலைப் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளால் நெற்பயிர்கள் நாசமாக்கப்பட்டு வருகின்றன. இந்த மாடுகளின் உரிமையாளர்கள் தற்போதைய பயிர்ச்செய்கைக் காலத்தில் அவற்றைக் கட்டி வளர்க்காததாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாக இந்தக் கால்நடைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தக் கால்நடைகளால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்காக இரவு வேளைகளில் மக்கள் தமது வயல்களில் காவல் வேலைகளில் ஈடுபட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்கள் இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு தீர்த்துவைக்க மாட்டார்களா? என்ற எதிர்பார்ப்போடும் காணப்படுகின்றனர்.

## கட்டடங்களை அமைப்போர் அனுமதி பெறுமாறு அறிவிப்பு!

வலி.கிழக்கு உப பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட காணிகளில் கட்டடங்கள், மற்றும் கிணறுகள், மலசலகூடங்கள், மதில்கள் அமைப்போர் வலி.கிழக்கு உப பிரதேச சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள வேண்டாம் எனப் பிரதேச சபையின் பொறுப்பதிகாரி வீ. ரட்ணசிங்கம் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பொதுமக்கள் தமது விருப்பத்தின்படி சுகாதாரத்துக்கு முரணாக மலசலகூடம், கிணறுகளை அமைப்பதால் மக்களுக்குத் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும், இவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்கும் முகமாக கட்டாயமாகத் தம்மிடம் அனுமதி பெறுமாறும், அனுமதி பெறாது அமைக்கப்படும் கட்டடங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

### கலைவிழாவும் பரிசளிப்பும்

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கலைவிழாவும், பரிசளிப்புவிழாவும் இன்று காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் வா. ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.


2வது பிறந்தநாள் வாழ்த்து

(25-10-04)

செல்வி

சிஜானுகா சிவநாதன்



சிஜானுகா எங்கள்
சிங்காரா தென்றல்
அகவை இரண்டில்
அடியெடுத்து வைத்திடுவாய்
கவலைகள் மறந்து
கனிவாய் வாழ்ந்திடுவாய்
மழலை மொழிபேசி
மகிழ்வாய் விளங்கிடுவாய்
சீரும் சிறப்புமாய்
சிறந்து வாழ்வாயே.

பளவத்தை, பொலிகண்டியைச் சேர்ந்த திரு. திருமதி சிவநாதன் ஜெயவதனா தம்பதிகளின் செல்வப் புதல்வி சிஜானுகா தனது இரண்டாவது பிறந்த நாளை (25-10-04) திங்கட்கிழமை அன்று சுவிஸ்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். செல்வி சிஜானுக்காவை பொலிகண்டி, பளவத்தை யைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, மாமா, ஜேந்தன் சித்தப்பா, அத்தைமார், தாத்தா, அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார், கனடாவில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, தங்கை சினேதா, மாமா, அத்தை, மச்சான், சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா மற்றும் பிரான்சில் வசிக்கும் பிரகாஸ் சித்தப்பா அனைவரும் சீரும் சிறப்புமாய் வாழ வாழ்த்துகின்றனர்.

முகவரி:
பளவத்தை, பொலிகண்டி. (969)

தகவல்:
இராசேந்திரம் சிவநீதன்
(சித்தப்பா)



நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

சூரியா, மாதவன், சித்தார்த்
திரிஷா, மீராஜஸ்மின்,
பாரதிராஜா நடிப்பில்

ஆய்த எழுத்து

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடான



ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

2 ஆவது ஜனத்திரள் வாரம்

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான
ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால்
நடித்த

7/G ரெயின்போ காலனி

இது ஒரு உண்மைக் கதை

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்காக ஜனாதிபதி சந்திரிகா தயாராகி வருகிறாராம்!



(கொழும்பு)

அடுத்த வருடம் முற்பகுதியில் அரசியல் யாப்புத் திருத்தத்துருக்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தயாராகி வருகின்றார்.

இது தொடர்பாக திரைக்குப் பின்னால் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய அரசியல் யாப்பின் படி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை, ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் வகிக்க முடியாது.

இதனை மேலும் 6 வருடங்களுக்கு நீடிப்பது அல்லது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையை கொண்டு வருவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே உத்தேச அரசியல் யாப்பு திருத்தத்தை கொண்டுவர அவர் தயாராகி வருகின்றார்.

அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வருவதெனில், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை (150 பேரின் ஆதரவு). ஆனால், இது அவரால் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலை.

இந்த நிலையில் அரசியல் யாப்பு நிர்ணய சபையொன்றை ஏற்படுத்தி, அதன்மூலம் தனது இலக்கை அடைவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை அவர் நடத்த தயாராகி வருகின்றார்.

இப்படியொரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுமானால், வீதியில் இறங்கி மக்கள் போராடுவார்கள் என, ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த வருடம் நவம்பர் மாதம் முடிவடைந்தவுடன், அதிலிருந்து அவர் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். இதனையே அரசியல் யாப்பு கூறுகின்றது.

தான் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக தன் இஷ்டப்படி செயற்பட நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

# செயலாளரின் பதவி குறைப்புக்கு நீதிமன்றம் தடை உத்தரவு

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் செயலாளரின் பதவி குறைப்பு நடவடிக்கைக்கு எதிராக, உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் செயலாளராகத் தற்போது பணியாற்றும் கல்யாணி ஏ.சில்வாவை இந்த ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளராக நியமிக்கத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என கல்யாணி ஏ.சில்வாவினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இந்த விசாரணையின் முடிவில் பணிப்பாளர் சபையின் முடிவை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஒத்திவைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அடையாள அட்டை விநியோகத்துக்கு 368 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கு அவற்றை ஒரு வருடத்துக்குள் வழங்குவதற்காக ஏற்படும் செலவுக்காக 368 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி மாளிகையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நடத்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி அடையாள அட்டைகளை அச்சுப் பதிப்பதற்கு 300 மில்லியனும், இதனை செய்துமுடிப்பதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடத்துக்குப் பணியாளர்களைச் சேர்த்து, அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு 50 மில்லியன் ரூபாவும், வாகன வசதிகளுக்காக 12 மில்லியன் ரூபாவும், இந்தத் திட்டத்துக்கான தற்காலிக கட்டடங்களை வாடகைக்கு எடுப்பதற்கு 6 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளன.

இந்த அடையாள அட்டைகள் வழங்கும் திட்டத்தின்படி ஒரு நாளைக்கு 15 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# விலைவாசி உயர்வை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி ஆர்ப்பாட்டம்

தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்தும், அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரியும் ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று முன்தினம் சிலாபம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது.

இந்த வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு குறித்து, அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென, இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் கோரிக்கை விடுத்தனர்.

நேற்றைய ஆப்பாட்டங்கள் குருநாகல் உட்பட மேலும் பல மாவட்டங்களில் இடம்பெற்றதாகவும், இதுபோன்ற மேலும் பல ஆர்ப்பாட்டங்கள் நாடளாவிய ரீதியில் தம்மால் நடத்தப்படவுள்ளதாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தனாயக்க தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்திலும், அதன்பின் நடந்த பொதுக் கூட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சம்பள உயர்வைக் கோரி நவம்பர் 3 இல் ஆர்ப்பாட்டம்

அரசாங்க ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அரச நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர் தொழிற் சங்கங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி நண்பகல் கொழும்பில் விகாரமகாதேவி பூங்காவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

அரசாங்க சேவை சம்பள அதிகரிப்புக் கோரிக்கைக் குழு ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில், ரயில்வே, சுகாதார, அஞ்சல் மற்றும் உள்ளூராட்சி உட்பட்ட அரச நிறுவனங்களின் 70 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தக் கூடாது. மற்றும் அரச ஊழியர்களது சம்பள அதிகரிப்புக் கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளதாக இந்தத் தொழிற்சங்க அமைப்பாளரான சம்பத் ராஜித தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் லிப்ரன் சதுக்கம் வரை செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களை இணைத்துக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. (தே)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோவை அவசியம்!

## பிரதி அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர

இலங்கையில் அரசியல்வாதிகளின் ஒழுக்கம் கீழ்த்தரமான நிலைக்குச் சென்றுவிட்டதாக மகாண சபை உள்ளூராட்சிப் பிரதி அமைச்சர் ஜயதிஸ்ஸ ரணவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, கருத்துத் தெரிவித்த ஜயதிஸ்ஸ ரணவீர நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென, ஒழுக்கக்கோவை ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அநாகரிகச் சம்பவங்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக்கோவை ஒன்றை ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தைத் தோற்றுவித்துள்ளது.

உங்களது அப்பா என்ன செய்கிறார் எனக் கேட்டால், எனது பிள்ளைகள் நான் ஒரு அரசியல்வாதி எனக் கூறுவதில்லை. அந்த அளவுக்கு எமது நாட்டு அரசியல் இழிவாகிவிட்டது.

இந்த நாட்டின் அரசியலுக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை நீக்க வேண்டுமாயின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒழுக்கக் கோவை ஒன்று அவசியம் எனத் தெரிவித்தார்.

# தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சானது - மலையகத்துடன் மட்டும் தொடர்புபட்டிருப்பதால், தேசிய ரீதியிலான அமைச்சை ஆறுமுகம் தொண்டமான் கோரியிருப்பதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கப்பல்துறை அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கு மேலதிகமாக, கல்வி அல்லது உயர் கல்வி அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன.

# சம்பூரில் புலிகளின் விமான ஓடுபாதை

(திருகோணமலை)

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூரில் விமான ஓடுபாதை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருவது தொடர்பாகத் தகவல் கிடைத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு கிலோ மீற்றர் நீளமுடைய நிலப்பரப்பு, தற்போது புல்டோசர்களைக் கொண்டு செவ்வை பண்ணப்பட்டு வருவதாகவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பை அண்மித்த பகுதியில், சுமார் 100 அடி உயரத்திலான தகவல் பரிமாற்றுக் கோபுரமொன்று விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு வருவதாகவும், அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் பரிமாற்றுக் கோபுர நிர்மாணப் பணிகளை குருணாகலைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர் ஒருவரே மேற்கொண்டு வருவதாகவும், அண்மைக் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான சம்பூர் பகுதிக்குச் சிமெந்து கொண்டு செல்லப்பட்டதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இவை விமான ஓடுபாதை நிர்மாணப் பணிகளுக்காகவே கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் தயா ரத்னநாயக்க!



புதிய இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் ஆர்.எம் தயா ரத்னாயக்க கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றுக்கொண்டா

இராணுவத் தலைமையகத்தில் உள்ள ஊடகப் பிரிவுப் பணியகத்தில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற நிகழ்வொன்றிலேப அவர் சம்பிரதாய பூர்வமாகத் தான் பதவியை ஏற்றுக்கொண்டார்.

சட்ட விரோதமாக காணி அனுமதிப்பத்திரங்களை வைத்திருந்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ள கேணல் சுமேத பெரேரா இராணுவப் பேச்சாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்தே, பிரிகேடியர் தயா ரத்னநாயக்க இந்தப் பதவியைப் பொறுப் பேற்றுள்ளார்.

குருநாகல் மாளய தேவ கல்லூரி பழைய மாணவனான பிரிகேடியர் தயா ரத்னநாயக்க, 1980 ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி இராணுவத்தில் இணைந்துகொண்டார்.

இவர் பயிற்சிகள் முடித்த பின்னர், 1981 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் திகதி முதலாவது இலகு காலாற்படை பற்றாலியனில் அதிகாரியாக இணைந்து கொண்டார்.

இவர் இராணுவத்தில் சிரேஷ்ட அதிகாரி நிலையில் பல பதவிகளை வகித்துள்ளார்.

மட்டக்களப்பு - கல்குடாவிலுள்ள 232 ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரியாக இருந்த இவர், ஏழாவது இராணுவப் பேச்சாளராகவும் இராணுவத்தின ஊடகப் பிரிவு இயக்குநராகவும் பெறுப்பேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பைசலாபாத் டெஸ்டில்

# 201 ஓட்டங்களால் பாகிஸ்தானை இலங்கை அணி வெற்றி கொண்டது!



(கராச்சி)

பாகிஸ்தான் அணிக்கு எதிராக நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் - இலங்கை அணி 201 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

வெற்றி பெறுவதற்கு 418 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி நேற்று ஐந்தாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

யுகானா 23 ஓட்டங்களுடனும் சொகைப் மலிக் 3 ஓட்டங்களுடனும் நேற்று தமது ஆட்டங்களை நிதானமாக ஆரம்பித்தனர்.

இந்த ஜோடி நிலைத்து நின்று ஆடிக் கொண்டிருந்த போதும்- அணி 154 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் - யுகானாவின் விக்கெட்டை எல்.பி. டபிள்யூ முறையில் ஹேரத் சாய்த்தார்.

யுகானா 110 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து அப்துல் ரசாக் களமிறங்கினாலும் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாமலேயே அவர் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாகக் களமிறங்கிய மொய்ன்கானும் ஒரே ஒரு ஓட்டத்துடன் சமிந்தவாஸின் பந்துவீச்சில் களுவிதாரணவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மலிக்குடன் முகமட் சமி களம் இறங்கி ஆடிக் கொண்டிருந்த போது- 6 ஓட்டங்களுடன் அவரும் ரன் அவுட் ஆனார்.

சொகைப் மலிக்கிற்கு துணையாக அக்தர் களம் இறங்கியபோதும்- மலிக் ஹேரத்தின் பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மலிக் 177 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 59 ஓட்டங்களைப் பெற்றார். சொகைப் மலிக் வீழ்த்தப்பட்ட சற்று நேரத்திலேயே அக்தரும் ஆட்டமிழந்தார்.

இவர் அதிரடியாக 12 பந்துகளில் 1 சிக்சர், 1 பவுண்டரி அடங்கலாக 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஹேரத்தின் பந்துவீச்சில், களுவிதாரணவால் ஸ்டம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தான் அணி 216 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் - இலங்கை அணி 201 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



பந்து வீச்சில் ஹேரத் மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் வாஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக சனத் ஜெயசூர்யா தெரிவானார்.




### வலிகாமம் வலய

## பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி!

வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

16 வயதுப் பிரிவில் - விக்ரோறியாக் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

இதேவேளை, இன்று பிற்பகல் 2.30 மணியளவில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் 16 வயதுப்பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் மோதவுள்ளன. (72)

## சமியின் காயத்தால் பாகிஸ்தானுக்கு சிக்கல்!

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் முகமது சமி இலங்கைக்கு எதிராக பைசலாபாத் நகரில் நடக்கும் முதல் டெஸ்ட் போட்டியில் காயமடைந்தார்.

களத்தடுப்புச் செய்யும்போது கடந்த வெள்ளியன்று அவருக்குக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து, நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டம் முழுவதும் அவர் பந்துவீச முடியவில்லை. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை அணி ஓட்டங்களைக் குவித்தது.

அவரது காயம் பற்றி அணி முகாமையாளர் ஹாருண் ரஷீத் கூறுகையில் - அவரது வயிற்றுப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறைந்தது எட்டு நாட்களாவது முழு ஓய்வு எடுக்க வேண்டும். சமியால் துடுப்பெடுத்தாட முடியும்.

ஆனால் பந்து வீசும் நிலையில் அவர் இல்லை என்கின்றார். 28 ஆம் திகதி கராச்சியில் தொடங்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சமி பங்கேற்பது சந்தேகமே. இது பாகிஸ்தான் அணிக்கு ஒரு பின்னடைவு.

## சச்சின் டெண்டுல்கரின் வருகையால் அவுஸ்ரேலிய அணிக்கு நெருக்கடி!

### ரிக்கி பொண்டிங் கூறுகிறார்



(மும்பாய்)

டெண்டுல்கரின் வருகை அவுஸ்ரேலிய அணிக்கு நிச்சயம் சவாலாக இருக்கும் என்று அவுஸ்ரேலிய அணியின் கப்டன் பொண்டிங் மும்பையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

முழங்கை வலி காரணமாக அவதிப்பட்டுவந்த டெண்டுல்கர் உடற்தகுதி பெற்றுவிட்டார். இதனால் நாக்பூரில் நடைபெற இருக்கும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் கலந்து கொள்ள இருக்கிறார்.

டெண்டுல்கரின் வருகை இந்திய அணிக்குப் பலம் சேர்த்துள்ளதாகவும், அவுஸ்ரேலிய அணிக்கு நிச்சயம் அது சவாலாக இருக்கும் என்றும் கப்டன் பொண்டிங் மும்பையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

கைவிரல் சிகிச்சைக்காக ஓய்வு எடுத்துவரும் பொண்டிங் தற்போது குணமடைந்து இந்தியா வந்திருக்கிறார். இவர் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் ஆடவில்லை. ஆனால் மும்பையில் அடுத்த மாதம் நடக்க உள்ள கடைசி டெஸ்ட் போட்டியில் பொண்டிங் களம் இறங்கத் திட்டமிட்டுள்ளார்.

பொண்டிங் நிருபர்களிடம் மேலும் கூறுகையில் -

அவுஸ்ரேலிய அணியில் இடம் பிடிக்க முடியாமல் போனது மிகப் பெரிய வருத்தம். கில்கிறிஸ்ட் தலைமையிலான வீரர்கள் சிறப்பாக ஆடிவருகிறார்கள். இந்திய மண்ணில் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் டெஸ்ட் தொடரை கைப்பற்ற நிறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

## கங்கூலியின் துடுப்பாட்டம் கப்டன் பதவியால் பாதிப்பு

### முன்னாள் கப்டன் கவாஸ்கர் தெரிவிப்பு



(புதுடெல்கி)

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனான கங்கூலியின் துடுப்பாட்டம் சமீபகாலமாக மோசமாக இருந்து வருகிறது. ஆசியக்கிண்ண மற்றும் சில போட்டிகளில் அவர் சிறப்பாக ஆடவில்லை.

மேலும் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பெங்களூர், சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டிகளில் மோசமாகவே ஆடினார். மோசமாக ஆடும் இவர் சக துடுப்பாட்ட வீரர்களை மட்டும் குறைகூறி வருகிறார்.

இந்த நிலையில் கப்டன் பதவியால் கங்கூலியின் துடுப்பாட்டத் திறமை பாதிக்கப்பட்டு உள்ளதாக முன்னாள் கப்டனும், இந்திய அணியின் துடுப்பாட்ட ஆலோசகருமான கவாஸ்கர் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கவாஸ்கர் இது தொடர்பாக கூறியதாவது -

கப்டன் கங்கூலி ஓட்டங்கள் எடுக்க மிகவும் சிரமப்படுகிறார். சென்னை டெஸ்டில் அவரது துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. அவுஸ்ரேலிய வீரர்களின் பந்து வீச்சுக்குப் பயப்படுகிறார். தேவையில்லாமல் அதிகமாக பதற்றம் அடைகிறார். இதற்கு கப்டன் பதவிதான் காரணம். கப்டன் பதவியால் அவரது துடுப்பாட்டத் திறமை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஓட்டங்கள் எடுக்க சிரமப்படும் கங்கூலி இனி வீரேந்தர் ஷேவாக்குடன் தொடக்க வீரராக ஆடுவதுதான் சரியான முடிவாக இருக்கும்.

டிராவிட், லக்ஸ்மன் ஆகியோர் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் ஆவார்கள். ஆனால் இருவரும் அவுஸ்ரேலிய தொடரில் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் இல்லை என்று அவர் கூறினார்.

டெஸ்ட் போட்டியில் அதிக சதம் (34) எடுத்த சாதனை வீரர் கவாஸ்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஹெவிட் - கிளிஸ்டர் திருமணம் ரத்து!



(அவுஸ்ரேலியா)

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த முன்னணி ரெனிஸ் வீரர்களில் ஒருவரான லைடன் ஹெவிட், பெல்ஜியத்தைச் சேர்ந்த கிம்கிளிஸ்டரைக் காதலித்து வந்தார்.

கடந்த 2 ஆண்டுகளாக இவர்கள் காதலித்து வந்தனர். ரெனிஸ் பிரபலங்களான இவர்களது காதல் அனைவருக்கும் தெரியும் வகையில் இருந்தது. இருவரும் திருமணம் செய்ய முடிவு செய்தனர். அதன்படி கடந்த டிசம்பர் மாதம் இவர்களது திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அப்போது அவர்களது திருமணம் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அகாஷி - ஸ்டெபிகிராபை போன்று பிரபலமாகக் காதலித்து வந்த ரெனிஸ் பிரபலங்களான ஹெவிட் - கிளிஸ்டர்ஸ் இடையேயான காதல் முறிந்தது. கிம்கிளிஸ்டர்சின் அதிகாரபூர்வ இணையத் தளத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட காரணங்களுக்காக இருவரும் பிரிந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் நடைபெறவிருந்த அவர்களது திருமணமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒருவரை கிளிஸ்டர்ஸ் திருமணம் செய்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இது தொடர்பாக ஹெவிட்டிடம் கேட்டபோது - எங்களது பிரிவுக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கிறது என்று கூறி எதையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

முன்னாள் முதற்தர வீராங்கனையான கிளிஸ்டர்ஸ் காயம் காரணமாக கடந்த ஒரு வருடமாக விளையாடவில்லை. ஹெவிட் - கிளிஸ்டர்ஸ் இடையேயான காதல் முறிவு ரெனிஸ் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## சங்கானைக் கல்விக் கோட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(சங்கானை)

சங்கானை கல்விக்கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று அணிகள் தெரிவு செய்யப்பட்டு - வலய மட்டப் போட்டிக்கான அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோட்டமட்டப் போட்டிகளில் 14 வயதுப் பிரிவில் - முதலாமிடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், இரண்டாமிடத்தை அராலி இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றன.

16 வயதுப் பிரிவில் - அராலி இந்துக் கல்லூரி முதலாமிடத்தையும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், மூன்றாமிடத்தை அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றன.

18 வயதுப் பிரிவில் - முதலாமிடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், இரண்டாமிடத்தை அராலி இந்துக் கல்லூரியும், மூன்றாமிடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் பெற்றன.

இந்த அணிகள் வலயமட்டப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (72)

# நெடுந்தீவில் மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பகுதியில் மக்கள் தங்களது தேவைகளுக்கு கடற் கரையோரங்களில் இருந்து மணல் அகழ்வதற்கான அனுமதி தற்போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த சில மாதகாலமாக மணல ஏற்றுவதற்கான அனுமதிவழங்கலில் பொலிஸாருக்கும் அரச நிர்வாக பணிமனைக்கும் இடையில் இருந்து வந்த இழுபறி நிலையினால் மணல் ஏற்றும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இதனால் மக்கள் தங்களது சொநதத் தேவைகளுக்கென மணல இன்றி வேலைகள் இழுத்தடிக்கப் பட்டதுடன், நிதி ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்படவேண்டிய பொது வேலைகளும் நிறைவுபெறாத நிலையில் இருந்தன.

தற்போதைய அனுமதி வழங்கும் முறையினால் வரையறுக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் இருந்து மாத்திரம், மணல் அகழ்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# திருத்தப்படாத வாய்க்காலினால் பொதுமக்கள் பெரும் சிரமம்!

(நெல்லியடி)

நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் மாலிசந்தி, உடுப்பிட்டி வீதி வெள்ள வாய்க்காலால் போக்குவரத்துக்குப் பெரிதும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

இந்த வாய்க்கால் கடந்த காலங்களில் அருகில் உள்ள பொது மக்களாலும், உள்ளூராட்சி சபைகளாலும் துப்புரவுசெய்யப்பட்டு வந்துள்ளது. ஆனால், தற்போது இந்த வாய்க்கால் கவனிப்பாரற்று இருப்பதால் அல்வாய் தெற்கு, வதிரி போன்ற கிராமங்களிலிருந்து வரும் மழை வெள்ளமானது வீதியில் மேவிப்பாய்வதால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்களும், பொதுமக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

அத்துடன் வீதிகள், தோட்டங்கள் வீதி ஒழுங்கைகள் போன்வற்றில் வெள்ளம் தேங்கியிருப்பதால் பொதுமக்கள் சிரமமடைகின்றனர். இந்த வாய்க்காலைத் திருத்தித்தருமாறு உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

# நெடுந்தீவு விவசாயிகளுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளில் - தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் விதைகள், விவசாய உபகரணங்கள் என்பன பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் அண்மையில் நெடுந்தீவில் வைத்து வழங்கப்பட்டன.

இதேவேளை நெடுந்தீவில் நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்டளவு குடும்பங்களுக்கு விதைநெல் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போது இங்கு பரீட்சார்த்தமான நெற்செய்கை மேற்கொளளபடுவதுடன், உள்ளூர் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் மரக்கறிச் செய்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# நீண்டதூரம் நடந்துசென்று பஸ் ஏறும் அனலைதீவு பயணிகள்



(அனலைதீவு)

அனலைதீவுத் துறைமுகத்துக்கு அண்மையாகப் பஸ்வந்து பயணிகளை ஏற்றிச்செல்லாமையினால் தங்கள் பயணப்பொதிச் சுமைகளுடன் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றே பொதுமக்கள் தங்கள் பயணத்தைத் தொடரவேண்டியுள்ளது.

துறைமுக நுழைவாயிற் பகுதியில் கடற்படையினர் முகாம் அமைத்து இருப்பதனாலேயே பஸ் துறைமுகம்வரை வந்துசெல்லாதிருப்பதாக அப்பகுதிமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை மழைகாலங்களில் பயணிகள் தங்கள் உடமைகளையும், வர்த்தக நிலையப் பொருட்களையும் நனைந்து சேதமான நிலையிலேயே கொண்டுசெல்ல வேண்டிய நிலைமை தொடர்வதாகவும், இந்தநிலையினை மாற்றித் துறைமுகம்வரைக்கும் பஸ் சேவையினை நடாத்த உரியவர்கள் உதவி செய்யவேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (113)

# கணினி அறிமுகக் கருத்தரங்கு!

வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் 2 ஆம் கல்வியாண்டு மாணவர்களின் இரண்டாவது காலாண்டு இறுதியில் நடாத்தப்படும் கணினி அறிமுகக் கருத்தரங்கு, கடந்த திங்கட்கிழமைமுதல் வட - கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களிலும் தமிழீழ மாணவர் அமைப்பின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டுவருகிறது.

அதன் ஒரு கட்டமாக கடந்த வியாழக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் நாகேந்திரசீலன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிகாமம் வலய கோட்டக்கல்வி அதிகாரி கைலாசநாதன், மாணவர் அமைப்பு பொறுப்பாளர் அ.மூவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அதனைத் தொடர்ந்து கணினிக் கருத்தரங்கை வன்னி தொழில்நுட்ப நிறுவக விரிவுரையாளர்கள், மாணவர்கள், செயலமர்வுகளாகச் சிறப்புற நடத்திமுடிந்தனர்.

இந்த நிகழ்வில் மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களும், அருணோதயா கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து பயன்பெற்றனர்.


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : ஞா.றஜீபா (தனுஷா)
முகவரி : காந்திஜி வீதி, கொக்குவில்



பெயர் : இ.காவியன்
முகவரி : அம்பாள்குளம், கிளிநொச்சி

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி. கா.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி தி.கமலநாதனும், சிறப்பு விருந்தினராக வலிமேற்கு, பிரதேச செயலக கணக்காளர் திருமதி இ.உதயகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர். (207)

## நெடுந்தீவில் முன்பள்ளி அமைப்பதற்கு நிதியுதவி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட - 2004 நிதி ஒதுக்கீட்டின்கீழ் நெடுந்தீவுப் பகுதியில் முன்பள்ளி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் ஒரு இலட்சம் ரூபாவை நெடுந்தீவுப் பிரதேசசபைக்கு வழங்கியுள்ளார். நெடுநதீவு பிரதேச சபையின்கீழ் இயங்கக்கூடிய வகையில் மாதிரி முன்பள்ளி ஒன்றை அமைப்பதற்கெனவே இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# நீண்டகாலமாகத் திருத்தப்படாத எழுவைதீவு துறைமுக வீதி!



எழுவைதீவுப் பிரதேசத்தின் துறைமுகமும், துறைமுக வீதியும் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து நீண்டகாலமாகத் திருத்தம் செய்யப்படாத நிலையில் இருப்பதால் இதனூடாகப் பயணிக்கும் பயணிகள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தத் துறைமுக வீதியைத் திருத்தம் செய்யவென வெளியிடங்களில் இருந்து கற்கள் பொதிசெய்யப்பட்டுக்கொண்டுவந்து, வீதியோரமாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளபோதும், இதுவரைக்கும் எந்தவிதமான வேறுவேலைகளும் மேற்கொள்ளப்படாதுளளது.

இதேவேளை உரப்பைகளில் பொதிசெய்யப்பட்ட கற்கள், பொதிகள் உவர்க் காற்றினால் சேதமடைந்தமையால் கடலில் விழுந்து வீணாகிக் போகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்தத் துறைமுக வீதியூடாக அவசரமாகவும், விரைவாகவும் பயணித்தால் விபத்துக்கள் உருவாக்கக் கூடிய நிலை காணப்படுவதால், இதில் உரிய அதிகாரிகள் கூடிய கவனம் எடுத்து திருத்தம்செய்து தரவேண்டுமென எழுவைதீவு மக்கள் எதிர்பார்க்கின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (113)

### மானிப்பாய் பிரதேச சபை பொது நூலகத்துக்கு முன்னால்

# 100 வருட தொன்மை வாய்ந்த வாகை மரம் அடியோடு சரிந்தது

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் பொதுநுலகத்துக்கு முன்னால் நின்ற தொன்மை வாய்ந்த வாகைமரம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் வேருடன் சாய்ந்து வீழ்ந்தது.

இந்த மரம் 100 வருடகாலம் தொன்மைவாய்ந்தது எனக் கூறப்படுகிறது. இந்தமரம் வீழ்ந்ததால் பொது நூலகத்தின் சைக்கிள் தரிப்பிடம் மற்றும் நூலகத்தின் ஒரு பகுதி சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தமரம் அதிகாலைவேளையில் பாறி விழுந்துள்ளதால், உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

பொதுநூலகத்தைப் பாவிக்கும் பெருமளவான மாணவர்கள் மற்றும் வாசகர்கள் பாவிப்பதால், அவர்களுடைய சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் சேதங்களும் தவிர்க்கப்பட்டுள்ளது. (100)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம்

(நெடுந்தீவு)

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், நாளை காலை 10 மணிககு பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் அத்தியாவசிய வேலைத் திட்டங்கள் பற்றியும் நடைமுறை வேலைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## சஞ்சிகை வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும்

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும். 'வித்தியா' சஞ்சிகை வெளியீடும் நாளை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி சிவபாலன் - சிவன் சுதன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும், வலி. கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் க.சங்கர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.



இந்தவருட உள்ளூராட்சி வாரத்தையொட்டி பிரதேச சபைகளின் செயற்தரத்தினை மதிப்பிடும் வகையில் நெடுந்தீவு பிரதேச சபைக்கு வருகைதந்த வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி. கந்தசாமியின் வருகையின் ஞாபகார்த்தமாக பிரதேசசபை முன்றலில் மரக்கன்றினை நாட்டுவதைப் படத்தில் காணலாம். (100)



# பற்று



திருமதி.நா.ஆனந்தராணி

நமது ஈழநாடு இரண்டாம்பரிசு சிறுகதை

அதிகாலை நான்கு மணியிருக்கும். விசில் சத்தம் அந்தக் காட்டையே அதிரும் வண்ணம் ஒலித்தது. சிறுவர்கள் அனைவரும் துடிதுடித்து எழுந்தார்கள். தேவன் அவ்வாறு எழுந்திருக்கவில்லை. காரணம் அன்றைய இரவு அவனுக்குச் சிவராத்திரியாகத் தென்பட்டது. புரண்டு புரண்டு படுத்தவனால் உறங்கவே முடியவில்லை. வீட்டு நினைவுவந்து அவனைப் படாதபாடு படுத்தியது. உறவுகளின் நினைவுகளை உதறித்தள்ளிவிட்டு உறங்கலாமென்றால் முதல்நாள் இரவு கண்ட கனவு அவனை உறங்கவிடவில்லை.

"என்ன மச்சான் தேவன், விசில் ஊதியிட்டாங்கள் எழும்பு" தேவனுக்கு மட்டும் என்ன, விசில் சத்தம் கேட்காமலா இருந்தது. அவனின் மனநிலை அவனைப் படுக்கையில் இருந்து எழவிடாமல் தடுத்தது.

"தேவன் என்னடாப்பா? கல கல எண்டு இருக்கிறாந். இண்டைக்கு மௌனமாய்க் கூறிய மணி வண்ணன் தேவனை உற்று நோக்கினான். தேவனின் விழியோரங்களில் நீர்த் துளிகள் பனித்திருந்தது.

மணிவண்ணன் வந்து சேர்ந்த காலத்தில்தான் தேவனும் வந்துசேர்ந்தான். இருவரும் உற்ற நண்பர்கள். தங்கள் வாழ்க்கையில் நடந்த விடயங்களை ஒளிவு மறைவின்றிக் கதைத்துக் கொள்வார்கள். மணிவண்ணனின் சகோதரிக்கு ஏற்பட்ட அட்டூழியத்தின் காரணத்தினால்தான், மணிவண்ணன் நாட்டைக் காப்பாற்றப் புறப்பட்டான். ஆனால், தேவன் அவ்வாறில்லை. குடும்பத்தில் சில சிறிய, சிறிய தவறுகள் விடும்போதெல்லாம் அவனது அன்னை "வீட்டுக்கு உதவாவிட்டாலும் நாட்டுக்கு உதவு" என்று அடிக்கடி சொல்லுவாள். அந்தப் பசிய வார்த்தை தேவனை வீட்டிலிருந்து புறப்பட வைத்துவிட்டது.

"மச்சான், முடியல்லையடா. தாங்க முடியல்லையடா" தேவனின் வார்த்தையைக் கேட்ட மணிவண்ணன் பதறிப் போனான். இருவருமாய்வந்து ஒன்றரை வருடங்களாகி விட்டது. ஏன் ஒன்றரை வருடங்களுக்கு மேலாகி விட்டது என்றுகூடச் சொல்லலாம். ஆனால், தேவன் ஒன்றையும் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. மணிவண்ணன் இடையிடையே குடும்பத்தின் நினைவுவந்து கலங்கிய நாட்களுமுண்டு.

"என்ன தேவன். ஏனடா அழுகிறாய்?" விழியோரங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துவிட்டவண்ணம் கேட்டான் மணிவண்ணன்.

"அம்மா வந்தவாவடா" இந்த வார்த்தை மணிவண்ணனை மேலும் பதற்றமடைய வைத்தது.

ஒன்றரை வருடங்கள் முடிந்தாலும் எங்களைப் பெற்றோர் பார்க்கமுடியாது. அப்படிப்பட்ட பயிற்சியில் இருக்கிறோம். அவ்வாறிருக்க தேவன் இவ்வாறு புலம்புகிறானே?"

"மச்சான் சொல்லுறதை விளங்கச் சொல்லடா"

"கனவிலை அம்மா வந்தவாவடா. எங்கடை நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் பெற்றோர் கண்டிப்பாய் வளர்க்கிறார்கள். அது எங்கடை வயதுப் பிள்ளைகளுக்குக் கரைச்சலாயத் தெரியுதல்லே" மீண்டும் அவனது கண்கள் அவனை அறியாமலே கலங்கின.

இரண்டாவது விசில் சத்தம் கேட்டது.

"தேவன் எழும்பு, இனியும் தாமதித்தால் வீணாய் அடிதான் வாங்கவேணும். இரவு படுக்கைக்குப் போகும்போது உனது கனவைச் சொல்லு" கூறியவாறு ஆயத்தமானான். தேவனும் வேண்டா வெறுப்பாக எழுந்து தன்னையும் தயார்ப் படுத்திக்கொண்டான்.

தேவனின் நிலை இவ்வாறிருக்க தேவனின் அன்னை, புனிதம் அடுப்புக்கு முன்னால் அமர்ந்து தோசைத் தட்டில் தோசை வார்த்துக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு தோசையாக வார்த்து, கை தோசையைப் பாத்திரத்தில் போட்டுக் கொண்டிருந்ததே தவிர மனம் தேவனையே சுற்றிய வண்ணம் இருந்தது.

பெற்றோருக்கு அருகில் இருந்து ஒத்தாசை புரியும் நேரத்தில் விதி விளையாடி விட்டதே. தான் உணராமல் சொன்ன வார்த்தையை விதிமேல் பழிபோட்டாள் பாவி அன்னை. வளர்ந்து ஆளான பிள்ளை, அவன் இருந்திருந்தால் பாத்திரத்திலிருந்து தோசை காலியாகியவண்ணம் இருந்திருக்கும். அருகில் இருந்து தோசை உண்பதுபோல பிரமை. கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக ஓடியது. இதுக்குத்தானா இந்த வளர்ச்சி அடைந்தான்? பிரேமில் தூங்கிய அவனது உருவப் படத்தைப் பார்த்துக்கொண்டாள். விம்மல் பொருமலாக வந்து, துக்கம் நெஞ்சை அடைத்தது. நெஞ்சைத் தடவிக்கொண்டாள். முடியவில்லை.

"அம்மா தோசை சுட்டிட்டியா? எனக்கு நேரம் போகுது"

தேவனுக்கு இளையவன் ராகவன் வந்து நின்றான். தேவன்போலவே அவன் காட்சியளித்தான். இரண்டு வருடங்களாகிவிட்டது. ராகவன் தேவனின் வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தான். தாயாரின் கண்ணீருக்கான காரணத்தை விளங்கிக் கொண்ட ராகவன்.

"அம்மா உங்களுக்கு எப்ப பார்த்தாலும் அண்ணாவின்ரை நினைவுபுத்தான். போனவர் பட்டுப் பழகட்டும். நீங்கள் கண்ணைத் துடையுங்கோ"

வாய்க்கு ருசியான சாப்பாடு தேடும் போதெல்லாம் தாயாரின் கண் கலங்குவது ராகவனுக்குத் தெரிந்த ஒன்று. தட்டில் தோசையைப் பரிமாறினாள் புனிதம். இளையவள் ஆர்த்தியும் தட்டை நீட்டினாள். அடிபட்டு மிகுதி இல்லாமல் சாப்பிட்டு மகிழ்ந்த குடும்பம். "ஆலையில் அகப்பட்ட இரும்பு போல" அல்லல் பட்டுக்கொண்டு இருக்கிறதே. இதற்குக் காரணம் என்ன?

பாழாய்ப் போன யுத்தம். யுத்தம் என்ற ஒன்று ஏற்படாவிட்டால், இந்த நிலை எந்தப் பெற்றோருக்கோ, பிள்ளைகளுக்கோ ஏற்பட்டிருக்குமா? சேலைத் தலைப்பாலை கண்களைத் துடைத்தவண்ணம் ஆர்த்தியின் தட்டிலும் தோசையைப் பரிமாறினாள். வீட்டிலிருந்து யாவரும் புறப்பட்டுவிட்டனர். வீடு வெறிச்சோடியது. இது பள்ளி நாட்களில் தினமும் நடைபெறும் ஒரு நிகழ்வுதானே. புனிதத்தின் மனம் மீண்டும் தேவனிடம் சென்றது. விதம் விதமான சாப்பாடு, நேரத்துக்கு நேரம் மாற்றிப்போட உடை, சினிமா, கோயில், நண்பர் வீடு எனச் சுற்றுலா. இவ்வாறு வாழ்ந்து வந்த பிள்ளை, உயர் கல்வியையும் இழந்து எந்தக் கட்டாந்தரையில் படுத்து உறங்குகிறதோ? நினைக்க, நினைக்க நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது.

"தேவா, தேவா" என வாய் புலம்பியது. தலையிலடித்துக் கதறித் தனது கவலையைத் தீர்த்துக் கொள்ளவேணும் போலிருந்தது. அவ்வாறு செய்ய இடமளியாது, கொழும்பு மாநகரம்போல் பக்கத்துப் பக்கத்து வீடுகள். அறைகளைச் சுவர் பிரிப்பதுபோல் வீடுகளைச சுவர் பிரித்தது. எவ்வாறு தலையிலடித்துக் கதறமுடியும்? இயந்திரம் எவ்வாறு உணர்ச்சி இல்லாமல் தனது கடமைகளைச் செய்யுமோ, அதேபோல புனிதமும் உணர்ச்சியற்ற ஜடமாகத் தனது வேலைகளைத் தொடரலானாள்.

கடைக்குட்டி ரகு, அருகில் இருந்த சிறிய தாயின் வீட்டில் விளையாடிவிட்டு, "அம்மா" என ஓடிவந்து அணைத்து முத்தமிட்டான். ரகுவின் முகத்தில் தேவனின் பிஞ்சு வதனத்தைக் கண்டு கொண்டாள் புனிதம். அள்ளி அணைத்து "தேவா, தேவா" என மாறி மாறி இரண்டு கன்னத்திலும் முத்தமாரி பொழிந்தாள். உச்சி மோந்தாள்.

"தேவா உன்னை இந்த வயதில் எவ்வளவு கண்ணுங் கருத்துமாய் வளர்த்தன். சிறிய நோய் ஏற்பட்டாலே துடிதுடித்துப் போவேனே தேவா, அப்பிடி வளர்க்கப்பட்ட நீ எங்கையப்பா இருக்கிறாய்? ஊன் இன்றி, உறக்கமின்றி நான் வளர்த்து ஆளாக்கிய பிள்ளை. ஊன் இன்றி, உறக்கமின்றி எந்தக் காட்டில் வாழ்கிறாயோ? தேவா...

ரகு கண்ணீரைத் தனது பிஞ்சுக் கரங்களினாலே மெதுவாகத் துடைத்துவிட்டான். ரகு நான்கு வயதுப் பையன்தான். ஆனாலும் தேவனை நன்கு மறக்காமல் இருந்தான்.

"அம்மா அண்ணா வருவாரம்மா. அண்ணா வருவாரம்மா. நீங்கள் அழாதீங்கம்மா. புலம்பிய புனிதத்தினுடைய மனநெருடலைப் புரிந்து, தாயின் கன்னத்தை வருடி விட்டான். புனிதமும் தனது கண்களைத் துடைத்துவிட்டு ரகுவை விலக்கிய வண்ணம் தனது கடமைகளைத் தொடர்ந்தாள். கடிகாரமானது எவ்வாறு நிற்காது சுழன்றுகொண்டே இருக்கிறதோ, அதேபோல புனிதத்தின் மனமும் தேவனைச் சுற்றிச் சுழலாத நேரம் என்பதே கிடையாது. புனிதத்தின் நிலை இவ்வாறிருக்க.

வெயில் சுடச்சுட பயிற்சியை முடித்துக்கொண்டு தமது அரண்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். தேவனும் மணிவண்ணனும் கொண்ட நாற்பதுபேர் அடங்கிய குழு. தேவனும், மணிவண்ணனும் அருகருகே வந்து கொண்டிருந்தார்கள். மணிவண்ணன் தேவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். காலையில் பார்த்த அதே வாடிய முகம்.

"என்ன தேவா இன்னமும் நீ திரும்பவில்லையாடா?" பூடகமாக மணி வண்ணன் கேட்ட கேள்வி, தேவனை ஏறிட்டுப் பார்க்க வைத்தது.

"எவ்வளவு கலகலப்பாக எல்லோருடனும் சிரித்துப் பேசி எல்லோரையுமே சிரிக்க வைக்கிற நீயா...? உனக்கென்னடா வந்தது?" தேவன் மௌனமாகப் பின் தொடர்ந்தான். சிறிது நேரத்தின்பின்,

"எனக்கும் உணர்ச்சிகள் இருக்குது மச்சான்" விரக்தியுடன் கூறினான் தேவன்.

"அந்த உணர்ச்சி நாட்டைக் காப்பாற்றுறதிலைதான் தேவா இருக்கவேணும். மற்றும்படி குடும்பம், கும்மாளம் என்று இருக்கக் கூடாது. தெரிஞ்சோ, தெரியாமலோ அல்லது விரும்பியோ விரும்பாமலோ நாம் நாட்டைக் காப்பாற்றப் புறப்பட்டிட்டம். இனி அதிலை எந்தப் பின்னடைவும் இருக்கக்கூடாது. "ஆவேசத்துடன் கூறியவன் தொடர்ந்தான்.

பெற்றோரைக் காப்பாற்ற மற்றப் பிள்ளையள் இருக்கினம். ஆனால் எமது தாய்த் திருநாட்டைக் காப்பாற்ற யார் இருக்கினம்? எம்மைப் போன்ற இளைஞர்கள்தான் முன்னுக்கு வரவேணும். சிந்திய இரத்தத்துக்கு ஒரு விலை வேணும் மச்சான். எந்த வாழ்க்கையும் பழக்கப்பட்டு விட்டால் அதுவே எமக்குச் சொர்க்கமாகத் தெரியும். இந்த வாழ்க்கைதான் நமக்குச் சொர்க்கம். எம்மைப்போன்ற எல்லா இளைஞர்களுக்குமே சொர்க்கம். பணத்துக்காக எத்தனையோபேர் இப்படிப்பட்ட வனாந்தர வாழ்க்கை வாழவில்லையா? நாம் நமது இந்த மண்ணை மீட்பதற்காகத்தானே இந்த வாழ்க்கையைத் தெரிந்தெடுத்து இருக்கின்றோம்."

சிறு சொற்பொழிவு செய்து தேவனின் மனதை மாற்ற முயன்றான் மணிவண்ணன். எப்படியோ அவனது முயற்சி வீண்போகவில்லை. தேவனின் முகம் சிறிது சிறிதாக மாற்றமடைந்து மலர்ந்து கொண்டது. அரணுக்கு வந்து ஓய்வெடுத்துக் கொண்டார்கள்.

"சரி சரி அம்மா வந்தவாவெல்லே கனவைச் சொல்லு" அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். அது தேவனின் முகத்தில் நன்கு தெரிந்துவிட்டது. அதனால் மீண்டும் துருவினான் மணிவண்ணன்.

"அம்மா வந்தவாவா? யார் மச்சான் சொன்னது? நீ ஏதாவது கனவு கினவு கண்டாயா?" புன்னகையுடன் கேட்டான் தேவன். மணிவண்ணனுக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு விட்டது. நாடியில் கைவைத்த வண்ணம் தேவனை ஆச்சரியமாகப் பார்த்தான். "கனவிலை அம்மா வந்தவாவடா" என்று பிதற்றிய தேவனா இவன்? என்னையே ஏமாற்றப் பார்க்கிறானே. ஆச்சரியத்தைத் தாங்கமாட்டாமல்,

"மச்சான் ஜோக்கா அடிக்கிறாய்?" மணிவண்ணனே வினாவினான். மணிவண்ணனின் அந்தர அவசரம் தேவனுக்குப் புரியாமல் இருக்குமா? மேலும் அவனைக்குழப்ப விரும்பாதவனாக

"மணிவண்ணா கனவு கண்டதும் உண்மை. அதிலை அம்மா வந்ததும் உண்மை. நான் கலங்கியதும் உண்மை. எல்லாவற்றையும் தான் குட்டிப் பிரசங்கம் ஒன்று செய்து மாற்றிவிட்டாயே"

அப்போது அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர், இவர்கள் அருகில் வந்து கொண்டிருந்தார். இருவரும் எழுந்து சல்யூட் அடித்தார்கள். இருவரது அருகிலும் வந்த அதிகாரி,

"தம்பி தேவன் உம்மைப் பார்க்க உமது குடும்பம் முகாமிலை வந்து தங்கி இருக்குது. உமக்குத் தெரியும் இந்தப் பயிற்சி எப்படிப்பட்ட கண்டிப்பான பயிற்சி என்று, நாங்கள் அவர்களைத் திருப்பி அனுப்பினால் அவர்கள் எங்களைத் திட்டிக்கொண்டு போவார்கள். திட்டுவாங்குவது எமக்குப் பெரிய காரியமில்லை. ஆனால் இவ்வளவு தூரம் பணத்தைச் செலவழித்து வந்தவர்களைத் திருப்பி அனுப்புவது பாவமாகத்தான் தெரிகிறது" என இழுத்தவர் சிறிது நேரத்தின்பின்,

"என்ன செய்யப் போகிறீர்? உமது கையில்தான் இருக்கிறது. இந்தப் பயிற்சியின் முக்கியத்துவம், யோசித்துச் சொல்லும்" கூறியவாறு விலகிச் சென்ற அதிகாரியை,

"சேர் நில்லுங்கள்" எனக் கூறியவண்ணம் ஒரு துண்டுக் கடதாசியை எடுத்துவந்து ஏதோ கிறுக்கினான். மணிவண்ணன் தேவன் கிறுக்கியதை எட்டி வாசித்தான். அவனுக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. 'காலையில்' அம்மா வந்தவாவடா என்று புலம்பியவனா இவன்? அன்னை அருகில் வந்தும் பார்க்க மறுத்து மடல் வரைகிறானே. மணிவண்ணனின் உடல் புல்லரித்துக் கொண்டது. அதிகாரிக்கு வியப்பு. தேவன் கிறுக்கிய கடிதத்தை வாங்கியவர் படித்துப் பார்த்தார் காகிதத்தில்,

அன்புள்ள பெற்றோருக்கு,

மிகப்பெரிய பணியில் இருக்கிறன். அங்கு இங்கு அலையாமல் இந்தப் பயிற்சி முடிய வந்து பார்க்கவும்.

இப்படிக்கு,
தேவன்.

என்று எழுதியிருந்தது. கடிதத்தை மடித்த அதிகாரியின் கண்களில், ஆனந்தக் கண்ணீர் பனித்தது. தேவனின் முதுகைத் தட்டியவாறு,

"தேவா உம்மைப்போன்ற இளைஞர்கள் தான் இந்த நாட்டுக்குத் தேவை. நன்றி தேவா நன்றி"

எனத் தேவனின் இரு கைகளையும் தனது கண்களில் ஒற்றிக்கொண்டார். மிகப் பெரிய சங்கடத்தில் இருந்து விடுபட்ட தெம்பும் சந்தோசமும் அவர் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

## இறுவெட்டு விமர்சனம்




**இறுவெட்டின் பெயர்:** அலைபாடும் பரணி
**வெளியீடு:** நிதர்சனம், தர்மேந்திரா கலையகத்தினர்
**இசை:** இசைப்பிரியன்
**பாடல்கள்:** ஈழத்து கவிஞர்கள்

"அலைபாடும் பரணி" என்ற இறுவெட்டு வெளிவந்திருக்கிறது. கடலையும், அவலங்களையும் இதனால் ஏற்பட்ட விடுதலையையும் உள்வாங்கி பாடல் ஒவ்வொன்றும் மீனவர்களின் கடல் வாழ்க்கையையும், கடற் புலிகளின் வீரததையும் உள்வாங்கி வரிகளாகச் சுமநது வருகின்றது.

நடுக்கடலில் படகில் சென்று, வலைவீசிக் காத்திருக்கும் அநத இடைவெளிக்குள், எதிரி மீனவர்களை வலைக்குள் போட்டும்- வலைக்குள் மீன், எதிரிவலைக்குள் மீனவன் என்று கேள்விக் குறியான வாழ்வில் விடை காணாமல் இன்றுவரை மீனவர் வாழ்வு நகர்கின்றது. வந்துபோகும் கடலுக்குப் படகாக, கரத்துக்குத் துடுப்பாக, மீனவனுக்கு வாழ்க்கையாக இயற்கையுடன் ஒட்டிப்போய்க்கொண்டிருக்கின்றது. பாடல்கள் மீனவனின் விடுதலையை மீட்டுத்தா என்றும் அறை கூவிநின்றது.

போராளிக் கலைஞன் இசைப்பிரியனின் இசையில் ஈழத்துக் கவிஞர்கள் பாடல்கள் எழுதி, ஈழத்துப் பாடகர்கள் பாடிநிற்கப் பாடல்கள் கருவொன்றாக, இலக்கு ஒன்றாக ஆர்ப்பரிக்கும் அலையாகவும் அமைதியான அலையாகவும் வந்துபோகின்றது.

நெருக்கமான வலைப்பின்னலுக்கு இடையில் அகப்பட்ட மீனவர்களின் வாழக்கை இனியது. மகத்தானது. இந்த வாழ்வு ஒன்று கூடி, கடலில் ஓடி, அள்ளிவந்து பங்கிட்டாலும் பிரிக்கமுடியாது. விண்மீன்கள் திசை காட்ட, கடல் மீன்கள் வலையில் சிக்கிக் கொள்ளும் அந்த இரவு வேளையில் வழி அனுப்பிவிட்டுக் கரையில் காத்திருக்கும் உறவு ஒவ்வொரு நாளும் சிக்கி சிக்கி விடுவிக்கப்பட்டு, பின் ஆறுதலடைகிற வாழ்வு கரையோரக் குடும்பங்களுக்கு மட்டும் வாய்த்திருக்கிறது. கடலும், அதன் அலையும் மேவிக்குதிக்கும் உணர்வைக் கடல் மீனவன் சூழலைத் தெளிவுபடுத்தி ஒவ்வொரு பாடல்களும் அமைந்திருக்கின்றன.

1999 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த கடற்புலிகளின் தாக்குதல் தளபதியும், துணைத் தளபதியும், லெப்டினன்ட் கேணல் நிரோஜனின் 5 ஆம் ஆண்டு நினைவாக நிதர்சனம் தர்மேந்திராக் கலையகத்தினரால் உருவாக்கம் செய்யப்பட்டது.

கடல் அள்ளித் தின்னும் உப்புக் காற்றும் தமிழர் வீரம் கொண்டுவந்த ஆழக் கடலும் சென்றுவரும்போது வழி தவறாமல் கொண்டுவந்து கரைசேர்த்து விடுகின்றது.

அள்ள அள்ளக் கொடுத்துக்கொண்டிருக்கின்ற கடல் தாய், விடுதலைக்கான பாதையையும் அமைத்துக்கொடுக்கின்றது. விடுதலைப் பாதைக்கு உரமூட்டிய தரையை விடக் கடல் மேலானது. உன்னை நம்பி மீனவர்களும், கடற்போராளிகளும் பயணம் செய்கிறார்கள். எதிரிக்கு இனி இடமில்லை. எல்லை மீறிவரின் வெடித்துச் சிதறும் எதிரிக்கப்பல். எதிரிக்கும், கப்பலுக்கும் கண் ணாம்பூச்சி விளையாட்டிக் காட்டி, அவன் கண்ணை மறைத்து நெருக்கி வந்து வெடிக்கும் கரும்புலிக்கும் வழி அமைத்துக் கொடுக்கின்றது. இனியும் வழிவிடுவாய், இனியும் வழிவிடுவாய்.

- செல்வா

## நூல் அகம்




**இறுவெட்டின் பெயர்:** ஆயிஷா (குறு நாவல்)
**எழுதியவர்:** இரா.நடராசன் (தமிழ்நாடு)
**வெளியீடு:** முதற்பதிப்பு - ஏப்ரல் 1997
கணையாழி மறுவெளியீடு - ஓகஸ்ட் 2004
**பதிப்பு:** அறிவமுது பதிப்பகம், யாழ்.நெடுஞ்சாலை, கிளிநொச்சி.
**பக்கம்:** 32
**விலை:** ரூபா29/=

ஆயிஷா என்ற குறுநாவல் அண்மையில் வெளிவந்துள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த இரா.நடராசன் எழுதி 1997 ஆம் ஆண்டு கணையாழியில் வெளிவந்த இந்தக் கதையை அதன் தேவைகருதி கிளிநொச்சி அறிவமுது பதிப்பகத்தினர் மறுவெளியீடாக கொண்டு வந்துள்ளனர்.

ஆக்க இலக்கியப் படைப்புக்களிலே விஞ்ஞானக் கதைகளை மையமாக வைதது கதை கூறும் பாணி குறைவுதான், என்றாலும் மிகக்குறுகிய 32 பக்கங்களிலே ஆழமான கருத்தை இந்தக் குறுநாவல் உணர்த்துகின்றது.

எதற்கும் துருவித் துருவிக் கேள்வி கேட்டு தமது ஐயத்தை தெளிவுபடுத்த விரும்பும் மாணவர்களை அடித்து இருத்தி ஆசிரியர் தான் சொல்வதையே எழுது மாறு திணிக்கும் மனோபாவம் எமது கல்வி முறையில் இருந்து முற்றாக அற்றுப்போய் விட்டது. எனக் கூற முடியாது.

இன்றைய தனியார் கல்விக் கூடங்களில் இருந்து பாடசாலை, மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் வரை மாணவர்களின் சொந்தக் கருத்துக்களையோ, தேடல்களையோ வரையறுத்து தேய்ந்துபோன ஒலித்தட்டுப் போல் ஆசிரியர் கூறுவதையே மீண்டும் மீண்டும் கேட்கும் நிலைக்கு மாணவர்கள் உள்ளனர். இந்த நிலையில் மாணவர்களிடம் இருந்து சீரிய சிந்தனைகளோ, அல்லது ஆயிஷா கேட்பதுபோல்

'........ கரோலின் ஏர்ஷல் போலவோ மேரி கியூரி போலவோ பெயர் செல்லுகிற மாதிரி ஒரு பெண் கூட விஞ்ஞானியா வரமுடியலையே ஏன்?

என்று கேட்கத் தூண்டுகிறது. இதற்கு, ஒரு வகையில் இந்தக் கல்வி முறையினையும், அதற்குள் ஊறிப்போய் இன்னமும் தம்மை மாற்றிக் கொள்ளாத ஆசிரியர்களையும் இரா.நடராசன் குற்றம் சாட்டுகிறார்.

ஓர் ஆக்க இலக்கியத்திற்குரிய அத்தனை பண்புகளையும் இந்தக் குறுநாவல் கொண்டிரா விட்டாலும் ஆயிஷா முன்வைக்கும் கருத்து மிக முக்கியமானது எமது சமூக வளர்ச்சியில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல். குறிப்பாக ஆசிரியர்களும், எழுத்தாளர்களும்!

- துவாரகன்

## இவர்களும் மாறிவிட்டார்களா?



அன்ரனி வேலைமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். மாலை 7 மணியாகிக் கொண்டிருந்தது. அவன் இன்னும் அரைமைல் தூரம் நடந்துசெல்ல வேண்டும். பத்திரகாளி கோயிலடியில் நிறையப்பேர் கூடியிருந்தார்கள். அன்று வெள்ளிக்கிழமை. கோயிலைத் தாண்டிச்செல்லும்போது திலீபனைப் பற்றிய இசைப்பாடலொன்று ஒலிபெருக்கியில் இருந்து கசிந்துகொண்டிருந்தது.எங்கேயிருந்து வருகிறது? பக்கத்து ஊரிலிருந்துதான். சரி போகும்போது எட்டிப் பார்த்துவிட்டுப் போகலாமென நினைத்துக்கொண்டு எட்டி நடந்தான் அன்ரனி.

அடேயப்பா... எவ்வளவு அலங்காரம். மின்சார சோடனை. ஆறு அடி உயரத்தில் போடப்பட்ட மேடை. பார்வையாளர்களோ, பட்டாளங்களுடன் பரவியிருந்தனர். திருவிழாவா? கல்யாண வீடா? அல்லது... எண்ணங்கள் எப்படி விரிந்தாலும், திலீபனின் நினைவுக் காலமல்லவா? அன்ரனி பால்குடிக் குழந்தையா இதுவெல்லாம் புரியாமலிருக்க-

கூட்டம் ஆரம்பமாகிறது. மேடையில் தலைவர் ஏறிநின்று பேசத் தொடங்குகிறார். அன்ரனிக்கு ஆளை அடையாளம் தெரிகிறது. அதே வைரமுத்துதான். ஓமோம் அவரேதான்...

"போராட்ட காலத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். திலீபனின் அகிம்சைப் போராட்டம் இந்திய தேசத்தையே திணற வைத்தது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே அன்புக்குரிய தமிழீழ மக்களே! தன்னிகரில்லாத தலைவனின் கீழ் அணிதிரள்வோம். எமது தேசத்தை நாமே மீட்டெடுப்போம்...." வார்த்தைகள் நீண்டு வளர்ந்தன.

அன்ரனிக்கு நம்பவே முடியவில்லை. அதே வைரமுத்து தானா?

* * *

அன்று ........

அன்ரனி வன்னியிலிருந்து மனைவி பிள்ளைகளுடன் ஊர்திரும்பி மூன்று மாதங்கள் உருண்டுவிட்டன. வேலை எதுவுமே அகப்படவில்லை. நிவாரணம்தான் அவனுக்குக் கைகொடுத்தது. அன்ரனி யாழ்ப்பாணம் பொது வைத்திய சாலையில் வேலை செய்துகொண்டிருந்தான். இடப்பெயர்வினால் அதனை இப் போது இழந்துவிட்டிருந்தான். அவனைப் பொறுத்தவரையில், ஊரைப் பொறுத்தவரையில் அவன் பரிதாபத்துக்கு உரியவன்தான்.

யாழ்ப்பாணத்துக்குத் தனது வேலை விடயமாகச் சென்று திரும்பிக்கொண்டிருந்தவனை வைரமுத்து எதிர்பாராமல் சந்தித்தார். "என்ன கோலமிது? என்ரை கடவுளே! மாப்பிள்ளை மாதிரி இருந்த ஆளின்ரை கோலத்தைப் பாருங்கோவன்... எப்ப வந்தனீங்கள்?" என்ன கோதாரிக்கு வன்னிக்கு வெளிக்கிட்டனீங்கள். இல்லைக் கேக்கிறன் . உங்களுக்கு விசர். விசரிலைதான் வெளிக்கிட்டனிங்கள். அந்த விசரன்களின்ர கதையைக்கேட்டு வெளிக்கிட்டனிங்கள் விசர் எண்டு தானே சொல்லவேணும். அவங்களுக்கு வேலையில்லை. சும்மா போராட்டம், போராட்டம் எண்டு எத்தினைபேர் அழிஞ்சு போச்சுதுகள். எங்கடை ஊருக்கை ஆரும் வெளிக்கிட்டதைக் கண்டனிங்களே! ஆக எங்கடை அண்ணற்ற பொடியன் குமார் மட்டும்தான் வன்னிக்கு வெளிக்கிட்டவன். அவனும் கோயில் திருவிழாவோடை வந்து சேர்ந்திட்டான். உங்கடை ஊருக்கைகூட நீங்கள் மட்டும்தானே போனனீங்கள். உண்மையிலை உங்களுக்கு விசர்." சொல்லிமுடிக்கும் மட்டும் பேயறைந்தவன் போல கேட்டுக்கொண்டு நின்றான் அன்ரனி.

* * *

இன்று...

"உலகத்திலை ஒவ்வொரு உயிரினமும் தங்கள் தங்கள் வாழ்வியலை நடாத்துவதற்கு, சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை இயைபு படுத்திக் கொள்கின்றன. ஆனால் தன்னுடைய வாழ்வைப் பொருட்படுத்தாது தனது மண்ணின் சுதந்திரத்துக்காக, அந்த மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்காகத் தன்னுயிரையே தியாகம் செய்த உத்தமனைப் பற்றிச் சொல்வதற்குமட்டும்தான் இவர்களால் முடியும்." சிந்தனை ஒருபுறம் சிறகடிக்க, வைரமுத்துவின் வீராவேசப் பேச்சு மறுபுறம் செவிகளைத் துளைத்தெடுக்கத் திரும்பித் திரும்பி மேடையைப் பார்த்தபடி அன்ரனி நடந்து கொண்டிருந்தான்.

சிலவேளை இவர்கள் மாறிவிட்டார்களோ?

- மாவன்னா

## உனது நினைவுகளும்... எனது உயிர்ப்பும்

என்னுள்ளே வியாபித்துள்ள
உன்னை....
விலக்க முடியாது
அந்தரமுறுகிறேன்.

உனது இதயத்துள்
என்ன இருக்கின்றதென்றறிய முடியாது
எனது ஏக்கங்கள் எங்கெங்கோ
பறந்து விரிந்து அலைவுறுகிறது.

எனது உயிருறவு நீயென்ற
நம்பிக்கையொன்றைக் கைவசம் வைத்தே
நான் உயிர்த்துக் கொள்கிறேன்.
முகம் காட்டும் உன் நினைவுகள்
முட்களாயும்... பூக்களாயும்
மாறி மாறிப் பிரத்தியட்சமாகின்றன.
நீ - தரும் சின்னச் சின்ன
இம்சைகளும்... துன்பங்களும்...
பேரின்பமாயே... எனக்குள்
உருமாற்றம் பெறுகிறது.

என்னைப் போர்த்தியுள்ள
உன்னைப் பற்றிய ஞாபகங்கள்
எனக்குள் ஏற்றத்தைத் தோற்றுவிப்பதிலேயே
ஆர்வமாய் உள்ளதென்பது
எனது ஆருடமாய் வேரூன்றிக் கொள்கிறது.

நீயே என் உயிருமாயும்...
நீயே என் முழுதுமாயும்...
உள்ளாய் என்கின்ற எனது விருப்பின் உச்சத்தில்
நான் நின்று கொண்டுள்ளேன்
எனது உன்னைப் பற்றிய
கனவுகள் நனவாகுமென்ற...
நினைவோடே என் பயணத்தில் ....
பயமின்றிச் செல்கின்றேன்.

- வதிரியூர் கவிநேசன்

## சொந்தங்கள்

ஒளியைத் தேடும் விண் பூச்சிகளாய்
எம்மருகே பல வட்டங்கள்
உள்ளத்துக் குமுறல்களை
எம் மருகே ஒளி தரும்
மெழுகு வர்த்திகளாய்
கண்கவரும் புதுமைகளை
சித்திரம் தீட்டி
காலடியில் வைத்து
அமைதியாய் கதைப்பார்கள்
பார் முழுதும் பரப்பி
விட்டேன் என்று
மத்தளம் தட்டுவார்கள்
வெற்றிடத்தில் உன்னை
நிரப்பிவிட்டேனென
வீரவசனம் பேசுவார்கள்
தட்டிக் கேட்டால்
வெளியே போ...
உனக்கு ஒன்றும் புரியாது
நீயோ சின்னப் பிள்ளை
திசை காட்டா...
திசை கருவியாய்...
திசை மாறிப் போனவனாய்
வெளியில் நான்.

- மீசாலை இன்பராஜ்

## முகவரி தேடி.... நானும்

வான் இருள் சாயம்
பூசிக்கொண்டபோது
என் கண்கள்
பார்வையை தொலைத்துக்கொண்டது.

ஆனால் மனம் மட்டும் உறுதி தளரவில்லை
நெடுந் தூரப் பயணம் உடல் சோ ர்ந்தது.

என்னை எதிர் பார்த்து... காத்திருக்கும்
என் அன்பு மழலைகளின் முகம் மனதில் புகுந்து
எனக்குள்
புரியாத புது வேகத்தைத் தர விரைந்தேன்.
அங்கே என் இருப்பிடத்தை காணவில்லை
எனது பசுமழலைகளையும் காணவில்லை
என் மனம் மீண்டும் தவிப்புக்குள்
ஆம்என் இருப்பிடம்
நிலத்தில் நிலை குலைந்து போனது
அந்த தென்னை மரம் மண்ணில் சிதையுண்டு
பரிதாபமாக
மழலைகள் எங்கே
அவர்களின் முகவரி தேடி நானும் இந்த
மண்ணில் மக்களைப் போல.

- ரமணன்.




## உழவு இயந்திர உரிமையாளருக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று துணுக்காய் பிரதேச கமநல கேந்திர நிலையத்தில் காலை 11 மணிக்கு இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் பிரதேச அரசியற்துறையினர் கோரியுள்ளனர்.

## சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப்டினண்ட் கேணல் சேகரின் 4ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

ஓயாத அலைகள்-4 படை நடவடிக்கையின் போது நாகர் கோவில் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சேகரின் 4ஆம் ஆண்டு நினைவுநாள் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி - சாள்ஸ் அனரனி படையணி அரசியற்துறைப் பொறுப்பாளர் அமுதாப் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தளபதிகளில் ஒருவரான பிரதாபன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதி கோபித் ஏற்றி வைத்தார். மாவீரர் சேகர், சேந்தன் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடர் ஏற்றிவைப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டதையடுத்து, நிர்வாக செயலகத்தை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நிர்வாக செயலக செயற்பாட்டு கோவையை சிறப்புத் தளபதி நகுலன் வழங்க, சாள்ஸ் அன்ரனி நிர்வாக பொறுப்பாளர் தமிழரசன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தளபதி நகுலன் சிறப்புரையை நிகழ்த்தினார்.

இந்த நினைவுநாள் நிகழ்வு நாகர் கோவில் களமுனைப் பகுதியில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளி பார்த்தீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை நாகர் கோவில் பகுதி கள மருத்துவ பொறுப்பாளர் திருமாவளவன் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தாக்குதல் தளபதிகளில் ஒருவரான பிரதாபன் ஏற்றிவைத்தார்.

மாவீரர் லெப்டினன்ட் கேணல் சேகரின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை நாகர் கோவில் களமுனை வாகன பகுதி பொறுப்பாளர் நாவரசன் ஏற்றிவைத்தார். மலர் மாலையை நாகர் கோவில் பிரதேச பொன்னம்மான் கண்ணிவெடி பிரிவுப் பொறுப்பாளர் சந்தியா அணிவித்தார். தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மற்றும் கடந்த வாரம் லெப்டினன்ட் கேணல் சேகர் நினைவாக கரப்பந்தாட்டப் போட்டி ஒன்றும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## நிரந்தரக் கட்டடம் இன்றி இயங்கிவரும் பாடசாலை

புளியங்குளம் சன்னாசி பரந்தன் செல்வவிநாயகர் வித்தியாலயம் நிரந்தரக் கட்டடம் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையிான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. 3 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய தேவையில், அதிபர் மட்டுமே கற்பித்தல் செயற்பாட்டை நடாத்தி வருகின்றார். ஆனால் தற்காலிகமாக ஒரு மண்டபம் மட்டுமே உள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழையால் இந்தப் பாடசாலையில் கல்விகற்கும், மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் துன்பங்களை சந்தித்து வருகின்றனர்.

## பூரணமாக புனரமைக்கப்படாத வீதி

நெடுங்கேணி நயினாமடு ஊடாக சின்னப் பூவரசங்குளம் செல்லும் வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த 6 மாதங்களுக்கு முன் வீதி புனரமைப்பு சபையினரால் திருத்தப்பட்ட இந்த வீதி, சரியான திட்டமிடல் இல்லாமலும் ஒப்பந்தகாரர்களின் அசமந்த போக்காலும் 2 கிலோ மீற்றர் வரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணத்தால் மிகவும் சேறும், சகதியுமாக காணப்படுகின்றது. இதனால் மக்கள் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வீதியைப் பயன்படுத்துவதால், மக்கள், மாண வர்கள், ஆசிரியர்கள் பெரும் துன் பங்களைச் சந்தித்து வருகின்றனர்.

## நோய்த் தடுப்பு விழிப்புணர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் நோய்த் தடுப்பு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றது.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ள நிலையில், பூநகரி - வலைப்பாடு, வேராவில், கிராஞ்சி, கடுக்காய்த்தீவு ஆகிய கிராமங்களில் தமிழீழ சுகாதார சேவையாளர், பூநகரி பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் இணைந்து அண்மையில் நான்கு தினங்களாக சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

## அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு நிகொட் 55 லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு

வன்னேரிக்குளம் ஐயனார்புரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கென நிகொட் நிதியுதவியின் கீழ் இரண்டு மாடிக்கட்டடம் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

வசதிகளற்று இயங்கும் இந்தப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பது பாடசாலைக்கு கிடைத்த வரப் பிரசாதமாகும். இந்தக் கட்டடத்துக்கு 55 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேலும் பல வசதிகள் இந்தப் பாடசாலைக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். வசதிகளற்று இயங்கிவந்தாலும் கூட இந்தப்பாடசாலையிலிருந்து ஆண்டு தோறும் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தேர்ச்சி பெறுவது குறிப்பிடத்தக்கது.

## பூநகர் பள்ளிக்குடா பிரதேசத்தில் 2 கிளைகளுக்கு அடிக்கல் நாட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 2 கிளைகள் நிறுவுவதற்கான கட்டடம் அமைப்பதற்கு நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்தப் பகுதியில் கடந்த பதினொரு ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட வலம்புரி இராணுவ நடவடிக்கையின் பின்னர் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகள் நிறுவுவதற்கான கட்டடம் அமைப்பதற்குப் பள்ளிக்குடா பிரதேசத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் அடிக்கலை பொது முகாமையாளர் பாலசுப்பிரமணியம், ஞானிமடம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கார்த்திகேசு ஆகியோர் நாட்டிவைத்தனர்.

## வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து செல்லும் இமேசன் வீதி, பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இந்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு நீர்ப்பாசன திணைக்களம் நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வட்டக்கச்சி பிரதேசத்தில் பெண்களுக்கு கராத்தே பயிற்சி

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பெண்களுக்கான கராத்தே பயிற்சி நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பெண்கள் மேம்பாட்டுக்கான தலைவி தமிழ்மகள் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொதுசுடரை வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றி வைக்க, தமிழீழ் தேசியக் கொடியை கங்கா ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் கருத்துரையைப் பாடசாலை முதல்வர் பாலகிருஷ்ணன், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

## நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வீதி புனரமைக்கப்படவில்லை

முல்லைத்தீவு - பாண்டியன்குளம் பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யத் தீர்மானிக்கப்பட்ட வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை.

பாண்டியன்குளம் - செல்வபுரம் மரப்பால வீதி புனரமைப்புச் செய்யவென உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் இந்த வீதி இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## விழிப்புணர்வு செயலமர்வு

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தால் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் 22 முன்பள்ளிகளின் ஆசிரியர்களும் 84 பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## மருதங்கேணி

## கிராமிய மருத்துவமனையை இயங்கவைக்க இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் நிகொட் திட்டத்தின் கீழ் கிராமிய மருத்துவமனை அமைக்கப்பட்ட போதிலும், அதனை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பிரதேசத்திலுள்ள 5 ஆயிரத்து மேற்பட்ட மக்கள் மருத்துவ வசதிகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது தமது மருத்துவ தேவையை பூர்த்தி செய்தவதற்கு நண்ட தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

மருத்துவமனையை விரைவில் மாகாண சுகாதார அமைச்சு திறந்து வைத்து மக்களின் கஷ்ட நிலையை போக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை கிராமத்தில் பற்சிகிச்சைக்கான வசதிகளும் செய்யப்பட வேண்டுமென்றும் மக்கள் கோரிககை விடுத்துள்ளனர்.

## கிளிநொச்சி உணவு விவசாய திணைக்களத்தால் 140 விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கல்

கிளிநொச்சி உணவு விவசாய நிறுவனத்தின் நிதியுதவியில் - கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

இதில் விவசாய அமைப்புக்களின் சம்மேளனத்தால் அக்கராயன் பிரதேசத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளும் 100 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நெற்செய்கைக்கான தூய விதைநெல் வழங்கப்பட்டது.

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேசத்திலும் நெற்செய்கை மேற்கொள்ளும் 40 விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கான தூய விதைநெல் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அக்கராயன் பிரதேச கிராம அலுவலர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட பணிப்பாளர் செந்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அலுவலர், உணவு விவசாய பணிப்பாளர்கள், விவசாய விரிவாக்க பிரிவினர் என பலரும் கலநது கொண்டனர்.

## கிணறு புனரமைப்பு இடைநிலையில்

அக்காரயன் கெங்காதரன் குடியிருப்பு மக்களுக்கு பொதுக் கிணறு ஒன்று அமைப்பதற்கு போரூட் நிறுவனம் நிதியுதவி செய்வதற்கு முன் வந்துள்ளது. இந்த நிலையில், கிணறு அமைப்பதற்கு முன் ஏற்பாட்டு வேலையாக 5 அடி ஆழத்துக்கு அந்தக் குடியிருப்பு மக்களின் பங்களிப்புடன் வெட்டப்பட்டது. இதன் மீதி வெட்டப்படாத நிலையிலுள்ளது.

தற்போது பெய்துவரும் மழை காரணமாக இடியும் அபாயம் தோன்றியுள்ளது. இந்த நிலையில் அந்தக் கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு பெரும் கஷ்டத்தை ஏற்படுத்தி வருகின்றன. இந்தக் கிணற்றின் வேலைகள் இடைநிறுத்தப்பட்டதையடுத்து மக்கள் விசனமடைந்துள்ளனர். சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## வட்டக்கச்சி பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றது.

வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடல் பிரதேச அரசியற்துறை செயலகத்தில் வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார். வட்டக்கச்சி மாயவனூர் ஆகிய பிரதேச மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், காணி சம்மந்தமான பிரச்சினைகளும் ஆராயப்பட்டன.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள மாவீரர் நாள் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

## சமாதான நீதிவான்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வள்ளிபுனத்தைச் சேர்ந்த சின்னையா பொன்னையா வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முல்லைத்தீவு - தேவிபுரம் வித்தியாலயம், உடையார்கட்டு குரவயல வித்தியாலயம், வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லம் என்பவற்றில் ஆங்கில ஆசிரியராகவும், புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுச் சங்கத்தின் பொதுசபை உறுப்பினராகவும் இதே சங்க வள்ளிபுனம் கிளைக்குழுத் தலைவராகவும் பணிபுரிகின்றார். யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிலகத்தின் ஓய்வுபெற்ற விற்பனை பிரதிநிதியும் குண்டசாலை லக்கி லண்ட் பிஸ்கட் தொழிலகத்தின் முன்னாள் விற்பனை பிரதிநிதியும், சிறந்த சமூக சேவையாளனுமாவார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்*
*இன்னா அறிவி னவர்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### பாதுகாப்பு உடன்பாடுகள் சமாதானத்தைப் பாதிக்குமா?

இன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றத்துக்கு இலங்கை அரசும் ஜனாதிபதியும் காட்டும் மெத்தனப்போக்கானது - இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த அவர்கள் எந்தவிதமான ஆழமான அக்கறையையும் மனப்பூர்வமாக எக்காலத்திலும் எடுக்கப் போவதில்லை என்பதையே உறுதிசெய்வதாகவுள்ளது.

இலங்கையின் இன்றைய அரசியல் தேவை இனப்பிரச்சினைக்கான தீர்க்கமான, நீதியான மற்றும் உறுதியான அரசியல் தீர்வேயாகும். இதனை சமாதானப் பேச்சுக்களை அர்த்தமுள்ளவகையில் தொடர்வதன் மூலமே சாத்தியமாக்கப்பட முடியும் என்பது தெளிவான முடிவேயாகும்.

அதனால்தான் இதனை சர்வதேச சமூகம் இன்று வலியுறுத்திவருகின்றது. ஆனாலும் கூட இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியினரும், ஜனாதிபதியும் இதனைத் தெளிவாக உணர்ந்துகொண்டும்கூட - அதற்கு மாறான சூழ்நிலைகளை உருவாக்குவதிலேயே தமது செயற்பாடுகளை முடக்கிவிட்டுள்ளனர் என்றால் அது மிகையில்லை.

சமாதானம் என்ற சமகாலத் தேவையை விடவும் அரசியல் நலன் என்ற எதிர்கால நோக்கமே சிங்கள அரசையும் அரசியல் வாதிகளையும் அதிகம் ஈர்ப்பதாக இருப்பதை இன்றைய அமைதி முயற்சிகளில் அவர்கள் ஆர்வம் காட்டாமைக்கு முக்கிய காரணமாகும். அவர்களைப் பொறுத்தவரையில் சிங்களத்தேசியம் என்பதும், பௌத்த மதவாதம் என்பதும் எந்தக் காலத்திலும் தமிழ்த்தேசியத்தை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளாது என்ற கருத்து நிலைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்களாகவே உள்ளனர்.

எனவே பேரினவாதிகளைப் பகைத்துக்கொண்டு இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வொன்றை காணும் முயற்சியில் தாங்கள் முனைந்தால் அது தமிழ்த்தேசியத்தை ஆதரிப்பதாகிவிடும் என்பதும் அத்தகைய ஒரு சூழல் தங்களது அரசியல் எதிர்காலத்தை சூனியாமாக்கிவிடும் என்றே அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த நிலையில் அரசோ, ஜனாதிபதியோ சமாதான முயற்சிகள் பற்றி தீவிரமாக தாங்கள் சிந்தித்து நடவடிக்கைகளை எடுப்பதாக பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தனர். உண்மையில் அவர்கள் இன்றைய தற்காலிக சமாதான சூழ்நிலையை - எப்படிக்குழப்பலாம் என்றே சிந்தித்து அதற்கேற்பவே அரசியல் இராணுவ மூலோபாயங்களையும் வகுத்து வருகிறார்கள் என்பதே இன்றைய சமாதான முயற்சிகள் குறித்த கருத்து நிலைப்பாட்டில் ஜதார்த்த வடிவமாகவுள்ளது.

ஒரு புறம் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக அதிகாரசபைக்கான மாற்றுயோசனைகள் தயார் என்று ஒரு அமைச்சர் கூற மறுபுறம் விடுதலைப் புலிகளின் யோசனைகளை அரசு மிகக் கவனமாக பரிசீலித்து வருவதாக இன்னொரு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு சாதாரண வழிகள் மூலமே எட்டப்படும். இனிமேல் அரசு போர் செய்யவிரும்பவில்லை என சர்வதேச சமூகத்துக்கு அறிக்கை கொடுக்கும் ஜனாதிபதி சமாதானம் நிலவும் போர்நிறுத்த சூழலில் யுத்தகாலத்தையும் விட அதிகமான தொகையான 5630 கோடி ரூபாவை பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவுடனும் இந்தியாவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ள தீவிரம் காட்டுவதும் நவீனரக ஆயுதக்கொள்வனவில் அதிகம் நாட்டம் கொள்வதும் கடற்படையை விரிவுபடுத்த போர்க்கப்பல்களையும் விமானப் படைக்கென போர்விமானங்களையும் பெற்றுக்கொள்ள இந்தியா, அமெரிக்கா, சீனா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் உடன்பாடுகாண முயல்வதும் சமாதானத்திற்காக என்றால் அதனை நம்புபவன் ஏமாளியாகத்தான் இருக்க வேண்டும்.

இவற்றை அந்தந்த நாடுகள் இலங்கை அரசுக்கு சமாதானத்தின் பெயரில் தான் வழங்குவதாக கூறுமேயானால், அதற்கு தலையாட்டுபவன் அறிவில்லாதவனாக இருக்க வேண்டும்.

போர்நிறுத்த உடன்பாட்டை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தும் உலகநாடுகள் - இராணுவ சமநிலை பேணப்படவேண்டும் என்ற உடன்பாட்டின் விதிகளில் முக்கியமானதொன்றை இலங்கை அரசு மீறுவதாக உதவிசெய்து அதனை ஆதரிப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றா தமிழ்மக்களிடம் எதிர்பார்க்கிறார்கள்.

இதுவொரு போதுமே சாத்தியமாகப்போவதில்லை.

தற்போதைய போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிமுறைகளை மாற்றியமைப்பதையோ, மீறுவதையோ தமிழ் மக்களின் சார்பில் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதே உண்மையாகும்.

இனிமேலும், தமிழ் மக்கள் தமது வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீது அதிகாரத்தனம் காட்டும் எந்த சக்திகளுக்கும் அடிபணியமாட்டார்கள் என்பதை சமாதானத்தை வலியுறுத்துவோர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

## நாடும் நடப்பும்


பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## தமிழக மீனவர்கள் மீதான நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் இலங்கை நோக்கி படையெடுப்பு!

### இந்திய மீனவர்கள் எச்சரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் கைவிடாவிட்டால், அந்த நாட்டுக் கடல் எல்லைக்குள் வெள்ளைக் கொடிகள் ஏந்தியவாறு படகுகளில் பயணிக்கவுள்ளதாகத் தமிழக மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக, தமிழ்நாடு - புதுவை மீனவர் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் என்.ஜே.போஸ் - ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் ஊடாகக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்ட 9 மீனவர்களையும், 92 இயந்திரப் படகுகளையும் உடனே விடுவிக்க வேண்டும். இல்லாவிட்டால், வெள்ளைக் கொடிகளுடன் படகுகளில் வருவோம். எம்மைக் கைதுசெய்வதானால் அதற்கும் தயார். நீதிமன்றத்தில் சரணடையவும் தயாராக இருக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற கடிதமொன்று, இந்தியப் பிரதமருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அதில், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகபட்டினம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 5 லட்சம் பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு இலங்கையில் இனப் பிரச்சினை வெடித்தது முதல், இலங்கை கடற்படையின் தொல்லையால் இந்த மீனவர்களுக்குப் பல துன்பங்கள் விளைவிக்கப்பட்டன. இதுவரை சுமார் 200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்துவதுடன், கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்ட 92 படகுகளையும் மத்திய அரசு மீட்டுத்தர வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசுடன் பிரதமர் மன்மோகன்சிங் பேச்சு நடத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

## சபாநாயகர் பதவிக்கு போட்டியிடுவதாக வெளியான செய்தியை மறுக்கிறார் வண.உடுவே தம்மாலோக தேரர்!

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர், நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்குப் போட்டியிடவுள்ளதாக வெளியான செய்திகளை மறுத்துள்ளார்.

தற்போதைய சபாநாயகரான டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, உடுவே தம்மாலோக தேரரரை சபாநாயகராக்குவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயற்சித்து வருவதாக வெளியான செய்திகள் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் யாப்பை மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கம், தமக்குச் சார்பான ஒருவர் நாடாளுமன்றில் சபாநாயகராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறது.

எனினும், ஆளும் கட்சி சார்பில் ஒருவரை அந்தப் பதவிக்குப் போட்டியிடச் செய்து, வெற்றியீட்டுவது சாத்தியமில்லை என்று கருதும் அரசாங்கம், ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உடுவே தம்மாலோக தேரரை அந்தப் பதவிக்குப் போட்டியிடச் செய்வதன் மூலம், அந்தக் கட்சியினரின் ஆதரவைப் பெற்று, அவரைத் தமக்குச் சார்பானவராக மாற்றிக்கொள்ளலாம் என்று கருதுவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்தச் செய்திகளை மறுத்துள்ள உடுவே தம்மாலோக தேரர், நாடாளுமன்றச் சபாநாயகராகும் எண்ணம் தமகுத் துளியும் கிடையாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

## கட்சி அமைப்பாளர்களை மாற்றுவதற்கு ஐ.தே.க.முடிவு

கட்சி அமைப்பாளர்களை மாற்றம் செய்ய ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தலைமையில் கூடிய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி ஒருதொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளுடன் ஒப்பிட்டு, அதில் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ஒருவர் பெற்ற விருப்பு வாக்குகள் 60 முதல் 70 சதவீதத்துக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில், அந்த உறுப்பினர்கள் வகிக்கும் கட்சி அமைப்பின் பதவியை இரத்துச் செய்யவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாகச் செயற்பட 3000 இற்கும் மேற்பட்ட புதிய விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதையடுத்து, புதிய அமைப்பாளர்களை நியமித்துக் கட்சியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் கூடி ஆராயவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உயர் தொழில்நுட்ப கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

கல்வி அமைச்சு நாட்டிலுள்ள 17 உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவனங்களுக்கும் அடுத்த ஆண்டுக்காக மாணவர்களை அனுமதிக்க விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

உயர் தேசியக் கணக்கியல் டிப்போமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா, தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (விவசாயம்) தேசிய ஆங்கில டிப்ளோமா, தேசிய வியாபாரக் கல்வி டிப்ளோமா ஆகிய பயிற்சி நெறிகளுக்கே மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அல்லது முன்னைய வருடங்களில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். அனுமதிகள் இசெற் புள்ளியின் அடிப்படையில் தேர்வுப் பரீட்சை நேர்முகப் பரீச்சைகளுக்கூடாக வழங்கப்படும்.

அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை இந்த மாதம் 29 ஆம் திகதி வெளிவரும் அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (31)

அரசியல்

பரணி

# மலையகத் தமிழ் தலைவர்கள் மக்களுக்காக உழைக்கவேண்டும்



மலையகத் தமிழ்மக்கள் அகதி வாழ்க்கை வாழவில்லை. மலையகத் தமிழ்மக்கள் ஏதிலிகளாக அவலப்படவில்லை. இதற்குக் காரணம், மலையகத் தலைமையின் நுட்பமான அரசியல் அணுகுமுறைகளே என்று சிலர் கூறுகின்றனர். இந்தக் கூற்றுச் சரியானதா? மலையக மக்கள் இடம்பெயரவில்லையா? அகதிகளாக்கப்படவில்லையா? என்பன போன்ற கேள்விகள் எழுவது இயற்கையே மலையகத் தமிழ்மக்களின் வரலாற்றைத் தெரியாதவர்கள் அல்லது அந்த மக்களின் துன்ப துயரங்களை மூடிமறைக்க முற்படும் தற்போதைய சில தலைமைகள்தான் மலையகத் தமிழ்மக்கள் ஏதிலிகளாக்கப்படவில்லை என்று கூறிவருகின்றனர்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் பல கோடி மக்கள் அகதிகளாக அல்லற்படுவதைப் புள்ளி விபரங்கள காட்டுகின்றன. தமது சொந்த மனைகளை விட்டுத் தமது சொத்துச் செல்வங்களை இழந்து தமது உறவினர்களைப் பிரிந்து முகாம்களில் வாழுகின்ற துயர வாழ்வுதான் அகதிவாழ்க்கையாகும்.

இதை இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கைத் தாயகமாகக் கொண்ட மக்கள் அனுபவித்திருக்கின்றார்கள். அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். விடுதலைப் போராட்டத்தில், உரிமைப் போராட்டத்தில் அடக்குமுறை ஆட்சியாளர்கள் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கி, விடுதலை உணர்வை மழுங்கடிக்கலாமென்று நினைத்து மக்களை ஏதிலிகளாக்குகின்றனர். ஆயுத அடக்குமுறைகள், இராணுவ முகாம்களின் விரிவாக்கம், மக்களைக் குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளால் மக்கள் ஏதிலிகளாக்கப்படுகின்றனர்.

ஆனால், மக்கள் இவற்றைத் தாங்கிக்கொண்டு விடுதலை பெற்றிட அகதிவாழ்க்கையை ஏற்கத் தயாராகிவிடுகின்றனர். இதுதான் இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கைத் தமிழர் தாயகமாகக்கொண்ட மக்களின் நிலையாகும். இந்த அகதி வாழ்வு, வேறு மக்களுக்கு வரவே கூடாது என்பது அகதி வாழ்க்கை வாழும் தமிழ் மக்களின் நிலைப்பாடு ஆகும்.

நாங்கள்படும் துன்பம் இதர மக்களும் அடையக்கூடாது என்பது துன்பப்பட்ட, வேதனைப்பட்ட உள்ளங்களுக்குள்தான் தெரியும். இந்த நிலையிலிருந்து தான் மலையகத் தமிழ் மக்களின் நிலைமையை நோக்கவேண்டும்.

1948, 1949 ஆகிய ஆண்டுகளில் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்புரிமைகளைக் குறைக்கவும், தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தவும சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்ட முதல் நடவடிக்கை இது என்று கூறலாம்.

இந்த நடவடிக்கைக்குச் சில வட-கிழக்கு அரசியல் வாதிகளும் உடந்தையாக இருந்தனர் என்பது உண்மைதான். இந்தக் குடியுரிமை, வாக்குரிமைப் பறிப்பு, அடுத்து மொழியுரிமையில் தொடரும் என்று கூறித் தந்தை செல்வா இணைப்பாட்சியில் தமிழரசு நிறுவுவதற்கான எண்ணக்கருவோடு இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தொடங்குகிறார்.

'இலங்கையைத் தாயகமாக ஏற்றுக் கொள்ளும் மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் குடியுரிமை வழங்க வேண்டும்' என்பது இந்தக் கட்சியின் ஒரு அடிப்படைக கொள்கையாகும். ஆனால், மலையகத் தமிழ்மக்களின் குடியுரிமைக்காக அந்த மக்களால் பாரிய போராட்டங்கள் அப்பொழுது மேற்கொள்ளப்படவில்லை.

இது கவலையளிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்தியாவிலிருந்து கூலிகளாகக் கொண்டுவரப்பட்ட தமிழினத்தின் துன்பதுயரம் சொல்லி மாளாது. வரும்வழியில் இறந்தவர்கள், மலையத்தைப் பண்படுத்தும் பொழுது இறந்தவர்கள், கொட்டும் மழையிலும், ஊசிபோல் குத்தும் குளிரிலும் போதிய உடுப்பு, போர்வையின்றி இறந்தவர்கள் எனத் தமிழ் மக்கள் தேயிலை, இறப்பர் தோட்டங்களுககு உரமாகிப்போனார்கள்.



ஆனால், இவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்பட்டபொழுது உரிய அரசியல் தலைமை இன்மையால் உரிமைக் குரல் எழுப்பமுடியாமல் அந்த இனம் துவண்டது. மலையகத்தில் தொழிற்சங்கங்களே இருந்தன. அவைகூடத் தொழிற் சங்க நடவடிக்கைகளில் தீவிரம் காட்டவில்லை என்றுதான் கூற வேண்டும். காலம் ஓடிக் கொண்டிருக்கின்றதன்றி, குடியுரிமையற்ற மக்கள் குடியுரிமையற்றவர்களாகவே இருந்தனர். தொழிற்சங்கங்கள் - தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தொழிற் சங்க உறுப்பினர்களை அதிகப்படுத்துவதில் மாத்திரமே கவனம் செலுத்திவந்தனர்.

வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டபொழுது மலையக மக்களின் உரிமைப் போராட்டம் இணைந்து எடுபடமுடியாமல் போயிற்று. இதற்குக் காரணம் மலையகத் தமிழ்மக்களின் வாழ்வியல் நிலை, இதர தமிழ்மக்களின் நிலைமை போன்றுஇருக்கவில்லை. பொருளியல் நிலையிலும், தொழிலாளர் என்ற ரீதியிலும் மிகவும் ஒடுக்கப்பட்ட இனமாகத்தான் மலையகத் தமிழ் மக்கள் இருந்தனர். அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மலையகக் குளிரில் அந்த மக்கள் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் அல்லற்பட்டுக்கொண்டிருந்தனர்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வடக்கு - கிழக்கில் தி.மு.க ஏடுகளான திராவிட நாடு, நம்நாடு, முரசொலி மன்றம், போர்வான், தென்றல், மாலைமணி போன்ற ஏடுகள் தமிழின உணர்வை ஏற்படுத்தின. இது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வள்ச்சிக்கும் உதவியது என்று கூறலாம். இந்த ஏடுகளின் தாக்கம் படிப்படியாக மலையகத்திலும் ஏற்படடது. ஆனால், இந்தத் தாக்கத்தை விரும்பாத சிங்கள அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்த மலையகத் தமிழ்மக்களை வேட்டையாடியது. தமிழ்மக்களின் கூட்டங்கள் சிங்கள மக்களின் இனவெறித் தாக்குதல்களால் இரத்தக் களறியில் முடிந்தன.

இவற்றைக் கேட்க யாருமே மலையகத்தில் இருக்கவில்லை தி.மு.கழகம் இலங்கையை உள்ளடக்கிய அகன்ற திராவிட நாட்டையும் கோரவில்லை. அகன்ற தமிழ்நாட்டையும் கோரவல்லை, ஆனால் சிங்கள அரசு மலையகத்தில் தி.மு.க ஏதோ பெரிய புரட்சிசெய்து மலையகத்தைத் தமிழகத்தோடு இணைத்துவிடும் என்று பூச்சாண்டிகாட்டி மலையகத் தமிழ் மக்களை அடக்கியமையை எதிர்க்க மலையகத்தில் தலைவர்களாக இருந்த எவரும் முன்வரவில்லை.

இந்தக் கெடுபிடி 10 ஆண்டுகளுக்குமேல் நீடித்தது. சிங்கள ஆட்சிப்பீடம் தமிழின உணர்வை மலையகத்தில் அழித்துவிட்டதென்றே கூறலாம். ஆனால், அந்த மக்களின் உள்ளத்திலே உணர்வுகள் அழிந்து விடவில்லை என்பதை அறிந்து கொள்ளமுடியும். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எழுபதுகளின் முற்பகுதியில் பதுளை, பண்டாரவளை, கொட்டக்கலை போன்ற இடங்களுக்குச சென்றபொழுது தேயிலைக கொழுந்தால் மாலைசெய்து அவருக்கு அணிவித்த தொழிலாளர்களின் உள்ளுணர்வு இதைத்தான் காட்டுகின்றது. அதாவது அங்கேயிருந்த மக்களைச் சரியாக வழிநடத்த அரசியல் சார்ந்தவர்கள் இல்லையே என்று அந்த மக்கள் தவித்தனர் என்பதுதான் உண்மை நிலை.

இதன்பின்னர் 1977 வருகின்றது. ஜே.ஆர் ஆட்சியை ஏற்கின்றார். நாட்டில் பேரினவாதிகளின் வன்முறை தொடங்குகின்றது. இந்த இன வன்முறையை மலையகத்தில் சில சிங்கள அரசியல்வாதிகள் முன்நின்று நடத்துகின்றனர். தமிழ் மக்கள் அகதிகளாகின்றனர். அமைதிநிலை நிலைநாட்டவேண்டிய நாட்டின் ஜனாதிபதி யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம் என்று குரல் எழுப்புகின்றார. தமிழ் மக்கள் மீண்டும் அகதிகளாகின்றனர். தாய்த் தமிழகத்தை நோக்கி ஓடிவருகின்றனர். இந்த நிலையில் மலையகத்திலிருந்த மக்களும் அகதிகளாகின்றனர். வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

மலையகத்தின் தேயிலைத் தோட்டத்துக்குத் தம்மை உரமாக்கிய மக்களின் வழிவந்த மக்கள் அகதிகளாகத் தமக்குத் தெரியாத மண்ணுக்கு, அந்நியமான மண்ணுக்கு வந்துசேர்கின்றனர். இந்த அவல நிலையைத் தெரியாதவர்கள் சிலர் மலையக மக்கள் அகதிகளாக இடம் பெயரவில்லை. என்று இன்று கூறிவருகின்றனர்.

இதனையடுத்து 1981 வருகின்றது. மீண்டும் ஒரு வன்முறை வெடிக்கின்றது. இந்த வன்முறை மற்றைய இடங்களைவிட மலையகத்தைத் தான் பெரிய பாதிப்புக்குள்ளாக்கிற்று. தொழிலாளர்களின் "லயன்" என்று அழைக்கப்படும் குடியிருப்புக்கள் எரிக்கப்பட்டன. தமிழ்த் தோட்ட உரிமையாளர்கள் தாக்கப்பட்டனர். அவர்களது வீடுகள் எரிக்கப்பட்டன. தொழிலாளர்கள் கோயில்களிலும், பாடசாலைகளிலும் அடைக்கலம் தேடினர். கணிசமான மக்கள் வடக்கு-கிழக்குப பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். ஆளும கட்சியுடன் சேர்ந்திருந்த மலையகத் தலைவர்கள் அமைச்சர்களாக இருந்தும் இந்த அவலங்களைத் தடுக்கமுடியாமல் இருந்தனர்.



இதன்பின்பு 1983 வன்முறை தொடங்கியது. இலங்கைத் தீவு முழுமையும் சிங்களக் காடையர்கள், இராணுவ, பொலிஸ் உதவியுடன் கட்டவிழ்த்துவிட்ட தமிழினத்தின் மீதான வன்முறையை உலகமே கண்டது. இப்பொழுதும் மலையகத் தலைமை அமைச்சரவையில் தான் இருந்தது. எதுவுமே செய்யவில்லை இத்தனையும் நடந்து மக்கள் எல்லாம் ஏதிலிகளாகினர்.

வடக்கு - கிழக்கு மாத்திரமல்ல, முழுத் தீவிலிருந்த தமிழர்களுமே தாக்கப்பட்டனர். மீண்டும் இடப்பெயர்வு. மலையகத் தமிழ்மக்களும் இடம்பெயர்ந்தனர். பெருந்தொகையான மக்கள் இந்தியாவுக்கு ஓடினார்கள். இதில் மலையகத் தமிழ் மக்களும் அடங்குவர். அதாவது வடக்கு - கிழக்கு தமிழ்மக்கள் மாத்திரமல்ல, மலையகத் தமிழ்மக்களும் தமிழகத்தில் அகதிகளாகச் சென்று அல்லற்பட்டனர். இன்றும் அல்லற்படுகின்றனர். ஆனால், சிலர் மலையகத் தமிழர்கள் அகதிகளாக்கப்படவில்லை என்று கூறுவது மக்களை ஏமாற்றும் பேச்சாகவே உள்ளது.

இதன்பின்னர் போர் வலுவடைந்தது. இராணுவ முகாம்கள் தமிழ் மக்களை விரட்டிவிட்டு விரிவாக்கப்பட்டன. மக்களை இராணுவம் விரட்டியதால் அகதிகளானோர் இன்றும் தமது சொந்தக் குடியிருப்புகளை நெருங்கமுடியாத நிலையில் உள்ளனர். அதனால் அடிமைகளாகத் தமிழினம் வாழத்தயாரில்லை என்பதைத்தான் 1995 ஒக்ரோபர் காட்டிநின்றது. சிங்கள இராணுவம் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமிக்கப் பெரியபோர் தொடுத்தபொழுது யுத்த தந்திரோபாய நடவடிக்கைக்காக புலிகள் வன்னிக்குத் தமது நிலையை மாற்றியபோது, 99.9 விழுக்காட்டுத் தமிழ்மக்களும் சிங்கள இராணுவத்துடன் வாழமாட்டோம் என்று வெளியேறித் தாங்களே அகதிகளாக வாழமுற்பட்டது எதனைக் காட்டுகின்றது.

மக்கள் இல்லாத வெறு மண்ணை ஆக்கிரமித்துக்கொள்ள சிங்கள அரசே என்றும், நாம் விடுதலையை வேண்டிநிற்கும் மக்கள் எந்த இழப்புக்களையும் தாங்கிநிற்போம் என்ற உறுதியான நிலைப்பாட்டை வெளிக் கொணர்ந்துள்ளது.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் ஈகத்திற்கு ஈடாக தமிழ்மக்கள் எதனையும் இழக்கத் தயாராக இருப்பதைத்தான் அந்த ஒக்ரோபர் 1995 இல் நிலைநாட்டியது.

இந்த வெளிப்பாடுதான் தமிழினத்தின் விடுதலையை விரைவுபடுத்திவருகின்றது. மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வந்து வாழ்ந்த மக்கள், வேறுபாடின்றி மக்களுடன்கலந்து இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளது யதார்த்தமாகும்.

இவ்வாறு மலையகத்திலிருந்து மக்களை வடக்கு - கிழக்கும் தன்னகத்தே உள்வாங்கியதை அறியாத சிலர் மலையக மக்கள் அகதி வாழ்க்கை வாழவில்லை என்று கூறிவருகின்றனர்.

மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் சொந்தக் காணிகளில் குடியேறிச் சொந்தக் காலில் தமிழர்தாயகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஆனால், இன்றும் மலையகத்தின் நிலை என்ன? மலையக இளைஞர்கள் தமது உரிமைகளை நிலைநாட்டக் கிளர்ந்தெழக் கூடாது என்ற நோக்கத்தில் சிங்கள அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதிகள் என்று பல இளைஞர்களைப் பிடித்து அடைத்த அரசு, மலையக மக்களை எப்படியும் அடக்கிவைக்கவே விரும்புகின்றது. இதன் ஒரு நிலைதான் சில மாதங்களுக்கு முன்னர் கந்தப்பளையில் நடந்ததாகும். இந்தக் கந்தப்பளைத் தாக்குதலைக்கூட ஒற்றுமையைக் கண்டிக்கமுடியாத நிலையில் மலையகத் தலைமை உள்ளது.

எனவே, எமது தலைமையின் நுட்பமான அணுகுமுறையால் நாங்கள் அகதிகளாகவில்லை என்று வரலாற்றைத் தவறாகக்கூறாமல் மலையகத் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக உழைக்கவேண்டியது மலையகத் தலைவர்களின் கடமையாகும்.

தமிழ்மக்களின் ஒற்றுமையே 'பலம்' என்று எப்பொழுது எண்ணுவார்களோ அப்பொழுது உரிமை பெற்ற இனமாக அனைத்துத் தமிழர்களும் வாழலாம்.

## கழிவு நீர் வாய்க்கால் மூடப்பட்டு வருகிறது

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் - கெருடாவில் கந்தசாமி ஆலயத்தின் வடக்குப்புறமாக வீதியோரமாக இருந்த கழிவுநீர் வாய்க்கால் அண்மையில் அயற்காணிச் சொந்தக்காரர்களால் நிரவப்பட்டுவருகிறது.

குடியிருப்பு நிலங்களிலிருந்து மழைநீர் இந்த வாய்க்கால் ஊடாகவே அயலிலுள்ள வயல்வெளியில் சென்று கலப்பது வழக்கம்.

தற்போது இந்த வாய்க்கால் மூடப்படுவதால் மழைநீர் வயலுக்குப் பாய்வது தடைப்படும் ஆபத்து உள்ளதாகவும் -

இதனைத் தடுப்பதற்கு இந்தப்பகுதி விவசாய சம்மேளனங்களோ, பிரதேச சபையினரோ எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனம் சாதிப்பது வேதனையளிப்பதாக இந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (24)

யாழ்ப்பாணம்

# சோயுஸ் ரொக்கட் பூமிக்கு திரும்பியது!



அமெரிக்கா, ரஷ்யா உட்பட 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தை அமைத்துள்ளன.

இந்த ஆய்வு கூடத்துக்கு அவ்வப்போது ரொக்கட் மூலம் விண்வெளி நிபுணர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். தளபாடங்களும் அனுப்பப்படுகின்றன. கொலம்பியா ரொக்கட் விபத்துக்குப் பிறகு அமெரிக்கா தனது ரொக்கட்டை அனுப்பிவைப்பதை நிறுத்திக்கொண்டது.

ரஷ்யா சோயுஸ் என்ற ரொக்கட்டை சில மாதங்களுக்கு முன் அனுப்பிவைத்தது. விண்வெளி ஆய்வுகூடத்துடன் இணைந்த அந்த ரொக்கட் இப்போது ஆய்வுகூடத்தில் இருந்து பிரிந்து பூமிக்குத் திரும்பியிருக்கிறது. அமெரிக்க விண்வெளி நிபுணர் ஒருவருடன் சோயுஸ் ரொக்கட் கஜகஸ்தானில் பத்திரமாக நேற்றுக்காலை தரையிறங்கியது.

# ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 19 பேர் பலி, 1,800 இற்கு மேல் காயம்!



(ரோக்கியோ)

ஜப்பானில் இடம்பெற்ற மிகப் பெரிய பூமியதிர்ச்சியினால் 19 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன், ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

முதலாவது பூமியதிர்ச்சி 6.8 றிச்டர் அளவில் தலைநகர் ரோக்கியோவிலிருந்து 260 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நிகாட்டா மாகாணத்தில் இடம்பெற்றது. இரண்டாவது பூமியதிர்வு 16 நிமிடங்களின் பின்னர் 5.9 றிச்டர் அளவில் ஏற்பட்டது.

இந்தப் பூமியதிர்வினால் நீர் விநியோகம் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் எவ்வித மின் விநியோகமும் இன்றி இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் சில வீடுகளும் சேதமடைந்துள்ளதுடன் வீதிகள் பலவும் சேதத்திற்குள்ளாகின. ரயில் வண்டிகளும் தண்டவாளங்களை விட்டு தடம்புரண்ட நிலையிலுள்ளன.

61 ஆயிரம் மக்கள் அவசரமாக அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புக்களில் நேற்றுமுன்தினம் தமது இரவைக் கழித்தனர். மற்றவர்கள் அனைவரும் தமது கார்களில் இருந்தனர்.

பூமியதிர்வினால் வீடுகளில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொருட்கள் விழுந்தே பலர் காயமடைந்ததாக ஜப்பானிய தொலைக்காட்சி தெரிவித்தது.

நிகாட்டா பிரதேசத்தில் வயது முதிர்ந்த ஆண் மற்றும் பெண் இவர்களுடன் இரண்டு மாதக்குழந்தை



யென மூவர் அதிர்ச்சியினால் உயிரிழந்தனர்.

மற்றொரு குழந்தை கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தது. இதனுடன் 55 வயதான இருவர் கொங்கிறீட் பிளாற் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தனர்.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உயர்ந்தபட்ச உதவிகள் வழங்குவதற்காக பாதிப்பு தொடர்பான சகல தரவுகளையும் திரட்டுமாறு பிரதமர் யுனிசிரோ கொய்சுமி - அமைச்சர்களுக்கு பணிப்புரை விடுதத்துள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட இடங்களை ஜப்பானின் 11 விமானங்கள் வட்டமிட்டு அவதானித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈராக் படைக்கு இணைக்கப்பட்ட 50 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலிருந்து வடகிழக்கு பகுபா நகரில் ஈராக்கிய இராணுவத்துக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தவர்களில் 50 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டதாக ...க் பொலிஸ் தெரிவித்தது.

கண்டுபிடிக்கப்பட்ட 50 உடல்களில் 38 உடல்கள் நான்கு வரிசையாக அடுக்கப் பட்டிருந்தன எனவும், மற்றைய 12 உடல்கள் பிறிதொரு இடத்தில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்ததாகவும் தியாலா மாகாணத்துக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியான ஜெனரல் வலீட் அல ஆசாவி தெரிவித்தார்.

எமது ஆரம்பகட்ட விசாரணைகளின்படி - இவர்கள் அனைவரும் சுடப்பட்ட பின்னர் நிலத்தில் வரிசையாக கிடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். 38 உடல்கள் நேற்று முன்தினமும் 12 உடல்கள் நேற்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

கொல்லப்பட்ட இவர்கள் ஈராக் படைக்கு புதிதாக சேர்க்கப்பட்டவர்களெனவும், இவர்கள் பலாடுர்ஷ் பகுதியிலுள்ள கிர்குக் இராணுவ முகாமில் பயிற்சி பெற்றவர்களெனவும், இவர்கள் அனைவரும் முகாமை விட்டு வெளியேறிச் சென்ற வேளையிலேயே பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டதாகவும் ஜெனரல் அலி அசாவி தெரிவித்தார்.

இந்த 50 பேரும் கூட்டாகச் சென்ற வேளை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமெனவும், இதிலிருந்து பிறிதொரு இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 12 பேரும் அந்தத் தாக்குதலிலிருந்து தப்பிச்சென்றவேளை - அந்தப் பகுதியில் வைத்து கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

### 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பறவையின் உடல் கண்டுபிடிப்பு

(பெய்ஜிங்)

சீனாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள லியான் ஜிங் என்ற இடத்தில் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பறவையின் உடல் உறுப்பை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அது முட்டையில் இருந்து வெளிவந்த குஞ்சு ஆகும்.

மேலும் அது டைனோசருடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது குறித்து தீவிரமாக ஆராய்ச்சி செய்தும் வருகின்றனர்.




# மனித குளோனிங்குக்கு தடைவிதிக்க ஐ.நாவில் அமெரிக்கா வலியுறுத்தல்!

மனித குளோனிங்கை தடை செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.நா சபையில் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

குளோனிங் முறையில் ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டி, குரங்கு போன்றவற்றை உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை படைத்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்குவதிலும் விஞ்ஞானிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மனித குளோனிங்குக்கு பல்வேறு நாடுகள் தடைவிதித்துள்ளன.

இருப்பினும் மருத்துவ ஆராய்ச்சிக்காகவும், சிகிச்சைக்காகவும் மனித கருவை அல்லது உறுப்புகளை மட்டும் குளோனிங் முறையில் உருவாக்க சில நாடுகள் அனுமதி அளிக்கத் தீர்மானித்துள்ளன.

இந்த நிலையில் ஐ.நா சபையின் மனித உரிமை குழு கூட்டத்தில் இந்தப் பிரச்சினை விவாதத்துக்கு வந்தது. அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா உட்பட 191 நாட்டு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அப்போது அமெரிக்க பிரதிநிதி மனித குளோனிங்குக்கு ஒட்டு மொத்தமாக தடை விதிக்க வேண்டும் இந்த விடயத்தில் ஐ.நா.சபை துரிதநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

குளோனிங் முறையில் கருவை உருவாக்க அனுமதித்தால் அது ஏழைப் பெண்களை சுரண்டும் விதமாக அமையும் என்றும் தெரிவித்தார். இதற்கு கோஸ்டரிக்கா உட்பட 63 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

பெல்ஜியம் உட்பட 21 நாடுகள் மருத்துவ ஆராய்ச்சிக்கு பயன்படுத்த ஆதரவு தெரிவித்தன. ஆனால் இந்தியா, ஜப்பான், இங்கிலாந்து, வடகொரியா உட்பட சில நாடுகள் மனித குளோனிங்குக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் கருதுகின்றன.

## யுரேனியத்தைக் குறைப்பதற்கு ஐரோப்பிய நாடுகள் வழங்கும் சலுகைகள் போதுமானதாக இல்லை

## ஈரான் அரசு தெரிவிப்பு

(தெஹ்ரான்)



ஈரானால் பயன்படுத்தப் பட்டுவரும யுரேனியத்தின் அளவைக் குறைப்பதற்காக ஐரோப்பிய நாடுகளால் வழங்கப்படவுள்ள சலுகைகள் போதுமானதாக இல்லையென ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் யுரேனியத்தினை அதிகமாகப் பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ள பிரித்தானியா, பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய நாடுகள், யுரேனியத்தின் பயன்பாட்டைக் குறைக்கும் படியும் அதற்கு ஈடாக வர்த்தக சலுகைகள் மற்றும் அணு உற்பத்தித் தொழில் நுட்பத்தை வழங்குவதாகவும் தெரிவித்திருந்தன.

இது தொடர்பான முன்மொழிவு ஒன்றினையும் இந்நாடுகள் ஈரானிடம் சமர்ப்பித்திருந்தன.

இந்த முன்மொழிவுகள் தொடர்பான அந்தரங்கப் பேச்சுக்கள் இந்த வாரத்தின் முற்பகுதியில் ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் இடம் பெற்றன.

இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹமீட் றிசா அசெவி - இந்த நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன் யோசனைகள் சமனிலைப்பட்டதாக இல்லையெனத் தெரிவித்தார்.

இந்த முன்மொழிவுகள் மிகவும் ஆரம்ப நிலையிலேயே உள்ளதாகவும், இதன் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் எவ்வளவிற்குப் பொருந்தும் என்பது கேள்விக்குறியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆனாலும், இம்முன்மொழிவுகள் தொடர்பாகத் தாம் ஆராய்ந்து வருவதாகவும், தாம் யுரேனியத்தை நல்ல நோக்கிலே பயன்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஈரான் யுரேனியத்தினை அணு ஆயுத உற்பத்திகளுக்காகவே பயன்படுத்துவதாக அமெரிக்கா உட்பட்ட சில நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஐரோப்பிய நாடுகளால் முன் வைக்கப்பட்டுள்ள இந்த முன்யோசனைகளை ஈரான் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்பது தொடர்பான முடிவினைத் தெரிவிக்கவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் அணு ஆயுதக் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

இம்முன்மொழிவுகளை ஈரான் ஏற்றுக்கொள்ள மறுக்கும் சந்தர்ப்பத்தில் ஈரான்மீது பொருளாதாரத் தடை விதிப்பது என்கின்ற அமெரிக்காவின் கொள்கைக்குத் தாமும் ஆதரவு வழங்கப்போவதாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

## காஸாவின் கான்யுனிஸ் பகுதியில்

# இஸ்ரேல் படையினர் தாக்குதல் 2 பலஸ்தீன போராளிகள் பலி!

(காஸா)

காஸா பிரதேசத்தின் கான்யுனிஸ் அகதிமுகாம் பகுதியில் இஸ்ரேலியப் போர்விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் இரு பலஸ்தீனப் போராளிகள் கொல்லப்பட்டதுடன் மற்றொரு போராளி படுகாயமடைந்துள்ளார்.

இந்தத் தாக்குதலின்போது பள்ளிவாசல் ஒன்றில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொதுமக்கள் நால்வரும் காயமடைந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யூதக்குடியிருப்பு ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஜிகாத் தீவிரவாதிகள் ஆயத்தம் செய்துகொண்டிருந்தபோதே, அவர்கள் மீது தாம் தாக்குதல் நடத்தியதாகவும் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த அனைவரும் பலஸ்தீனப் போராளிகள் எனவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால், இதனை மறுத்துள்ள



பலஸ்தீன அதிகாரி ஒருவர் பலஸ்தீனியப் போராளிகளது கூட்டம் ஒன்று இடம்பெற்றுக்கொண்டிருந்த கட்டடத்தின் மீதே இஸ்ரேலியப் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட இரு பலஸ்தீனப் போராளிகள் இருவரது உடல்களும் அடையாளம் காணமுடியாதவாறு சிதைந்துள்ளதாகத் தெரிவித்த அவ் அதிகாரி - காயமடைந்த மற்றைய போராளியும் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்தத் தாக்குதல் இடம்பெற்ற சமயம் அருகிலுள்ள மசூதியில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொதுமக்கள் நால்வர் காயமடைந்ததை அவ்அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளனர்.

இறந்த இரு ஜிகாத் அமைப்பை சேர்ந்த போராளிகளும் 20 வயதை உடையவர்கள் என்றும் இவர்களது உடல்கள் எரிகாயங்களுடன் காணப்படுவதாகவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இதே சமயம் பலஸ்தீனப் பகுதியில் வைத்து இஸ்ரேலிய இராணுவத்தினருக்கு உளவு வேலை பார்க்கும் ஒருவரை தாம் சுட்டுக்கொன்றுள்ளதாக ஜிகாத் அமைப்பு தெரிவித்துள்ளது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் ஹசன் முசலாம் என ஜிகாத் அமைப்புத் தெரிவித்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மட்டக்களப்பு-மருதமுனையில் மாணவன் அடித்துக் கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மருதமுனையில் மாணவன் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

10 ஆம் ஆண்டில் கல்விபயிலும் 16 வயது மாணவன் அப்துல் வாகித் என்பவரே அடித்துக் கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் மருதமுனை மௌலானா மைதானத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இவர் தலையில் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## குடாநாட்டு நிலை...

துடன் யாழ்.குடாநாட்டுப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைமை குறித்து தெளிவாக எடுத்து விளக்கினார்.

இதன் பின்னர் ஹெலிஹொப்ரர் மூலம் மிருசுவில் 55 ஆவது பிரிவின் தலைமையகத்துக்குச் சென்ற அமெரிக்கப் படைத்தளபதி தலைமையிலான குழுவினரை பிரிகேடியர் வி.ஆர்.சில்வா வரவேற்று முகமாலை முன்னணிக் காவலரண் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

முன்ன்ணிப் படைநிலைகள் தளங்களின் பாதுகாப்புக் குறித்து நேரில் ஆராய்ந்த அமெரிக்க குழுவினர் –

விஷேட காலாட்படைப் பயிற்சி நிலையத்துக்குச் சென்று பயிற்சிகள் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கினர்.

பின்னர் நாகர்கோயில் 551 ஆவது பிரிகேட் தளத்தில் மதிய உணவருந்திய இந்தக் குழுவினர் நண்பகல் பலாலி விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு பயணமானதாகத் தெரியவருகிறது.

## திருகோணமலை...

இந்த விசாரணைக்காக நாம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேரடியாகச் சென றோம். பாதுகாப்பு நிலைகள் முழுதும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளன. இவ்வாறு சென்ற நாம், விடுதலைப் புலிகள் புதிய பாதுகாப்பு நிலைகளை அமைக்கின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்ட மூன்று இடங்களுக்குச் சென்றோம். அங்கு நாம் எவ்வித இராணுவ நிலைகளையும் காணவில்லை.

அததுடன், இந்த இடங்களில் சிறிய பதுங்குகுழிகள் மற்றும் காவலரண்கள் உள்ளன. இவைகளில் சில புதியன. சில பழையன. ஆனால்; இவையனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளன.

விடுதலைப் புலிகளால் ஆழமான காட்டுப் பகுதிக்குள் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட மூன்று நிலைகளுக்கு நாம் செல்லவில்லை. இந்தக் காட்டுப் பகுதிக்குள் புலிகளால் பாதுகாப்பு நிலைகள் அமைக்கப்படுவதாக பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

இந்தப் படைநிலைகள் மூலம் இரண்டு பகுதிக்குமான தூரத்தை நாம் பார்க்கின்றபோது இது படையினருக்கு அச்சுறுத்தலாக அமையுமென நாம் நினைக்கவில்லை.

விடுதலைப் புலிகளால் மணிராசன்குளத்தில் அமைக்கப்பட்ட ஒரேயொரு முகாமே அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ளதாகும். இதுவும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு முரணானது என நாம் ஏற்கனவே தெரிவித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

திருமலை துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் மிகநெருக்கமாக விடுதலைப் புலிகள் தமது ஆட்லறி நிலைகளை அமைத்துள்ளனர் என இராணுவப் புலனாய்வுத்துறையினர் எச்சரிக்கை விடுத்ததையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத் இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளுமாறு கண்காணிப்புக்குழுவுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கண்காணிப்புக் குழு ஏற்கனவே இது தொடர்பான விசாரணையை நடத்தி இரண்டு அறிக்கைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் புதிதாக காவலரண்கள் எதையும் அமைக்கவில்லையெனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போதும் கண்காணிப்புக்குழு விசாரணைகளை நடத்தி சமர்ப்பித்த அறிக்கையிலும் இதனையே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் போக்கினால் எரிபொருளின் விலை உயரும்!

### ஐ.தே.க. எம்.பி. விசனம்

(கொழும்பு)

இன்னும் சில வாரகாலத்திற்குள் எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் அதிகரிக்கும் என ஐக்கிய தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

எரிபொருளுக்கான வரியை அரசாங்கம் நீக்குமானால் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க முடியும். தற்போது எரிபொருளுக்கான விலைகளைக் குறைக்க வேண்டும்.

எமது அரசாங்கம் ஆட்சியில் இருந்த போது பிரதமர் தலைமையில் கூடும் பொருளாதார கூட்டத்தில் மசகு எண்ணெய் பீப்பா ஒன்று 40 டொலருக்கு மேல் அதிகரிக்குமானால் வரியை நீக்கும் திட்டம் ஒன்று இருந்தது. ஆனால் தற்போதய அரசாங்கம் என்ன செய்கின்றது.

எரிபொருட்களின் விலையை அதிகரித்ததுடன் அதற்கான வரியையும் அறவிடுகின்றது. பெற்றோலுக்கு 28.98 வீதவரியும், டீசலுக்கு 9.28 வீத வரியும் அறவிடுகின்றது இதனை நீக்கினால் பெற்றோல் விலை 42 ரூபாவிற்கும் டீசலை 32.72 ரூபாவிற்கும் விற்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்காணிப்பு...

இவர் திருகோணமலைக்கு இன்று விஜயம் மேற்கொள்வார் என, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹக்ரப் ஹொாக்லன்ட் தெரிவித்தார்.

## இலங்கையின்...

துடன், சுற்றுப்புறச் சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று மேலும் குறிப்பிட்டார்.

## சர்வதேச...

கால நிர்வாகம் தொடர்பாக இரண்டு தரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வு இன்மையே காரணமென நாம் நினைக்கின்றோம். அத்துடன் மீளப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து பெருமளவு பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். இதிலுள்ள மிகப் பெரிய சவால் என்னவெனில் யுத்தநிறுத்தத்தை உறுதியாகப் பேணுவதுதானென ஆசிய இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

### இந்திய வான்படைத் தாக்குதலில்

# உயிரிழந்த பொதுமக்களுக்கு நேற்று சாவகச்சேரியில் அஞ்சலி!

1987 ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரில் இந்திய வான்படையினர் நிகழ்த்திய கண்மூடித்தனமான குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 95 இற்கும் மேற்பட்ட பொதுமக்களின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரில் இந்த மக்களின் நினைவாக பொதுப்படம் வைக்கப்பட்டு, நடைபெற்ற இந்த நினைவு நிகழ்வுக்கு சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் பேர்னாட் தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரை சாவகச்சேரி வணிகர் கழக உறுப்பினர் தவச்செல்வன், சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றினர்.

ஈகச்சுடரை வணிகர் கழக உறுப்பினர் சற்குணராசா, சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் நவரத்தினம் சாவகச்சேரி தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் அப்புத்துரை ஆகியோர் ஏற்றினர்.

பொது நினைவுப் படத்துக்கான மாலையை யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் ஆகியோர் அணிவித்தனர். இறுதியாக நினைவுரைகள் இடம்பெற்றன.

## தலைமைப் பீடத்தின் நிலை...

களும் சமாதானத்திற்கு எதிரான சக்திகளும் தவறாகப் பரப்புகின்ற செய்திகளின் உண்மைகளை நாங்கள் எடுத்து விளக்கியிருக்கின்றோம் நிலைப்பாட்டினை தெளிவாகவும், உண்மையாகவும் எடுத்துக் கூறியதனால், அவர்கள் அதை சரியாகப் புரிந்துகொண்டிருப்பார்கள்.

சர்வதேச சமூகம் குறிப்பாக நோர்வே அனுசரணையாளர்களும் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதில் அதிக அக்கறையும் கரிசனையும் கொண்டிருப்பதை இந்தச் சந்திப்புகளின் போது உணர்ந்து கொண்டோம். இது எங்களின் நிலைப்பாட்டுக்கு மகவும் பொருத்தமாகவுள்ளது.

பேச்சுகளை ஆரம்பிப்பது குறித்து ஒரு தரப்பினரின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அனுசரணையாளர்கள் முடிவெடுப்பது கஷ்டம். அவர்கள் எமது ஆர்வத்தையும் அக்கறையையும் எமது நிலைப்பாட்டையும் அறிந்து கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை அறிந்த பின்புதான் அவர்கள் அதற்கான நிலைப்பாடுகளை எடுக்கக் கூடியதாக இருக்கும். இன்றைய சூழ்நிலையில் இரண்டு சம தரப்பு சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதற்குரிய சூழ்நிலையில் - ஒரு தரப்போடு பாதுகாப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்த முனைவது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தும் சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இதன் உன்மைத்தன்மை, அதிகாரபூர்வ நிலைப்பாடுகள் எங்களுக்குத் தெரியாத நிலையில் இப்படியான செய்திகள் ஊடகங்களில் வந்துகொண்டு இருக்கின்றன. அனேகமாக தழிழ்மக்கள் மத்தியில் இந்த விடயம் சந்தேகத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. உண்மையான அதிகார பூர்வமான நிலைப்பாட்டைத் தெரிந்துகொண்ட பின்னர் தான் எமது நிலைப்பாட்டை தெரிவிக்க முடியும்.

இந்த உடன்பாடு போர்நிறுத்த ஒப்பந்தத்தை பாதிக்கும் நிலையை தோற்றுவிக்குமா என்பது குறித்து உண்மையான அதிகார பூர்வமான நிலைப்பாடுகளை நாங்கள் தெளிவாக அறிந்த பின்பே எமது நிலைப்பாட்டை வெளியிடமுடியும்.

கடற்புலிகளின் தளபதி சூசைக்கு வெளிநாட்டில் சிகிச்சை அளிககப்பட்டு குணமடைந்திருக்கிறார். அவர் விரைவில் தாயகம் திரும்புவார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு எங்களுடைய தலைவரின் தலைமையிலேயே மிக உறுதியாகவும், இறுக்கமாகவும், கட்டுப்பாடாகவும் இருக்கிறது. ஆனபடியால் இப்படியான வதந்திகளுக்கு இடமில்லை. இன்னும் ஓரிருநாட்களில் சூசை நாடுதிரும்புவார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**தேசிய லொத்தர் சபை – மஹஜன சம்பத பெறுபேறுகள்**

சீட்டிழுப்பு இல:- 1659 திகதி:- 22.10.2004

வெற்றி இலக்கங்கள்

X 0 1 8 7 2 5

அடுத்த சுப்பர் பரிசு 399 லட்சத்துக்குமேல்

## பணிநிலை வெற்றிடம்

### அலுவலக செய்தியாளர்கள்

'நமது ஈழநாடு' பத்திரிகையின் அலுவலக செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 2004. 10.27 புதன்கிழமை காலை 10 மணிக்கு - கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

கல்வித் தகைமை - க.பொ.த (உயர்தரம்)

கிளிநொச்சியில் எமது அலுவலக செய்தியாளராகப் பணிபுரிய விரும்புவோரும் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.